# தீபகச் சுடர்

TO SHARE THE LIGHT

மார்ச் 2025

தீபம் 13 சுடர் 10

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



# தீபகத்திலிருந்து இறையாசீர்



**அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,**

## தவக்காலம்: புனிதக் காலம், அருளின் காலம், இரக்கத்தின் காலம்.

மகிழ்ச்சியுடனும், நம்பிக்கையுடனும் இந்த புனித தவக்காலத்தில் நுழையும் நாம் இயேசுவின் பாடுகள், அவரின் இறப்பு, அவரின் உயிர்ப்பை நினைவுக் கூர்ந்து, தியானித்து, நம் தந்தையாகிய கடவுளின் அன்பின் உறவை புதுப்பித்துக்கொள்ள நம்மை அழைக்கின்றது.

இப்புனித காலத்தில் நாம் நம் வாழ்க்கையை நினைத்துப் பார்க்கவும், மனம் மாறி பிறரோடு அன்புறவில் வாழவும், அதனால் கடவுளோடு இணைந்து, அவரது உயிர்ப்பில் பங்குபெற அழைக்கப்படுகின்றோம். எனவே இந்த நாற்பது நாள்களில் நோன்பிருந்து, செபம் செய்து, பிறருக்கு உதவி செய்து வாழ திருஅவை நம்மை அழைக்கின்றது.

**தவக்காலம்:** தவக்காலம் என்பது ஒருசில வசதி வாய்ப்புகளைத் தவிர்ப்பதோடு மட்டுமல்லாமல், கடவுளோடு நெருக்கமாக வாழவும், கடவுளைப்போல் நாமும் அன்பு செய்து வாழவும் அழைக்கப்பட்டுள்ளோம். தவக்காலம், என்பது "கடவுளை நம் வாழ்வில் வரவேற்கவும், அவர் நம் இதயத்தில் வாழ்வதற்கான இடம் ஒன்று தயார் செய்வதற்காகவும் திருஅவையால் கொடுக்கப்பட்ட புனிதமான காலம் இது" என திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறுகின்றார். எனவே இது ஒரு புனிதமானக் காலம், அருளின் காலம், இரக்கத்தின் காலம், நம் இதயங்களை கடவுள் பக்கம் திருப்புவதற்கான ஒரு சிறந்த காலம். "இப்பொழுதாவது உண்ணா நோன்பிருந்து, அழுது புலம்பிக்கொண்டு, உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்" (யோவேல் 2:12) என, கடவுள் நம்மை மனம் திருந்தி வாழ அழைக்கின்றார். இது வெறும் வெளியடையாளத்திற்கான அழைத்தல் மட்டும் அல்லாமல், உள்ளார்ந்த மனமாற்றத்திற்கான அழைப்பு. கிறிஸ்துவை இன்னும் அதிகமாக அன்பு செய்யவும், அவரோடு சென்று பாடுபடவும், இறக்கவும், அவரில் உயிர்த்தெழவும் நம்மை அழைக்கின்றது.

இந்த திருக்கால திருப்பயணத்தை மகிழ்ச்சியோடு கடந்து, மனம்மாறி ஒரு புதிய வாழ்வை, புதிய பாதையை, புதிய சமூகத்தை பாவதளை அடிமையிலிருந்து உயிர்ப்பின் விடுதலை மக்களாக வாழ திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அறிவுறுத்துகிறார்.

எனவே, செபம், தவம், தானம் இவைகளில் நாம் கடவுளுக்கு மட்டும் தெரியும் வகையில் இறைவார்த்தை நமக்குக் காட்டிய வழிமுறைகளில், பிறரை அன்பு செய்து, தேவைப்பட்டோருக்கு உதவி செய்து, தனித்திருப்போரோடு உறவாடி, பகைவரை மன்னித்து, நம்பிக்கையை பிறரோடு கொண்டாடி, ஏழை எளிய மக்களைச் சந்தித்து, உணவுத்தந்து, தாகம் தீர்த்து, ஆடை அணிவித்து, நோயுற்றோரை சந்தித்து, அயலாரை அழைத்து, தனித்திருப்போரை கவனித்து, ஆறுதல் தந்து, வறுமையின் நிமித்தம் பிற மாநிலங்களிலிருந்து வந்தோரை ஏற்று, உபசரித்து, கிறிஸ்துவாக வாழ இந்த தவக்காலம் நமக்கு ஒரு சிறந்த புனித காலமாக அமைகிறது.

தவக்காலம், உயிர்ப்பின் காலத்தில் முடிவடையும். எனவே கிறிஸ்துவோடு இறந்தால் நாம் அவரின் உயிர்ப்பில் வாழ்வோம். எனவே இக்காலத்தை தவறவிடாமல் புனிதமான இக்காலத்தைப் பயன்படுத்தி கிறிஸ்துவின் ஒளியாய் இவ்வுலகில் வாழ கடவுளின் அருளையும், இரக்கத்தையும் மன்றாடுவோம்.

என்றும் அன்புடன்
அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச
இயக்குநர் - தீபகம்

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

02.03.2025 பொதுக்காலம் 8ம் ஞாயிறு - திருப்பலி 02

04.03.2025 புனித கசிமீர் - திருப்பலி 03

05.03.2025 திருநீற்றுப் புதன் - திருப்பலி 04

07.03.2025 புனித பெர்பெத்துவா, பெலிசிட்டி - திருப்பலி 05

08.03.2025 இறைவனின் புனித யோவான் - திருப்பலி 06

09.03.2025 தவக்காலம் முதல் ஞாயிறு - திருப்பலி 07

16.03.2025 தவக்காலம் இரண்டாம் ஞாயிறு - திருப்பலி 08

19.03.2025 புனித யோசேப்பு கன்னி மரியாவின் கணவர் பெருவிழா - திருப்பலி 10

23.03.2025 தவக்காலம் 3ம் ஞாயிறு - திருப்பலி 11

25.03.2025 ஆண்டவரின் பிறப்பின் அறிவிப்பு பெருவிழா - திருப்பலி 13

26.03.2025 புனித லட்ஜர் - திருப்பலி 14

27.03.2025 எகிப்து நாட்டு புனித யோவான் - திருப்பலி 15

29.03.2025 அரிமத்தியா ஊர் புனித யோசேப்பு 17

30.03.2025 தவக்காலம் 4ம் - திருப்பலி 18

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

புனிதத்தில் வழிநடத்தும் தவமும், ஒறுத்தலும் 19

கன்னி மரியாவின் கணவர் புனித யோசேப்பு: நம் குடும்ப வாழ்வுக்கு வழிகாட்டி 22

புனித பெர்பெத்துவா, பெலிசிட்டி, வாழ்வு தரும் பாடம் 24

திருஅவைச் செய்திகள் 26

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

## 02.03.2025 பொதுக்காலம் 8ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. டிலைலா சேவியர்

I. சீராக். 27: 4-7 II. 1கொரி.15: 54-58 லூக். 6: 39-45

நம் அனைவரின் உள்ளத்திலும் இயேசுவின் சீடராக அர்த்தமுள்ள நல்ல கனிதரும் மனிதர்களாக மாறவேண்டுமென்ற ஏக்கமும், தேடலும் உள்ளது. இந்த ஏக்கத்திற்கும் தேடலுக்கும் இன்றைய வழிபாடும் வழிபாட்டு வாசகங்களும் என்னென்ன செய்ய வேண்டும் என்பதை உவமைகள் வழியாக இயேசு அறிவுரை வழங்குகின்றார்.

**முதல் உவமையாக:** பார்வையற்ற ஒருவர் வேறொருவருக்கு வழிகாட்ட இயலுமா? இருவரும் குழியில் அல்லவா விழுவார்கள். இந்த உவமையின் வழியாக இயேசு உடல் ரீதியான பார்வையற்றவர்களை அல்லாமல், ஆன்மீக ரீதியான பார்வையற்றவர்களை குறிப்பிடுகிறார். நல்ல ஆன்மீக வழிகாட்டிகளை தேர்ந்தெடுத்து நம்மை பலப்படுத்தி பண்படுத்தி வழிகாட்டுவோம். **இரண்டாவது உவமையாக:** பிறரின் குற்றங்களை பெரிதுப்படுத்தி தன்னுடைய குறைகளை கண்டுக்கொள்ளாமல் கடந்து செல்வது மனித இயல்பு. பிறரின் குறைகளையும் தவறுகளையும் நியாயம் தீர்க்க நீதிபதியாக கடும் கோபத்துடன் கண்டனம் செய்கின்ற நாம்தான் நம்முடைய தவறுகளுக்காக மனம் வருந்த வேண்டுமென்பதை இயேசு சுட்டிக் காட்டுகின்றார். பிறர் செய்கின்ற நற்செயல்களையும், அவர்களைப்பற்றி அதிகம் பேசுவோம், பாராட்டுவோம், உற்சாகப்படுத்துவோம் இவற்றைத் தான் இயேசு நம்மிடம் எதிர்ப்பார்க்கின்றார்.

**மூன்றாவது உவமையாக:** இன்றைய முதல் வாசகத்தில் சொல், செயல் ஒரு மனிதனிடமுள்ள பண்பாட்டை எடுத்துரைக்கின்றது. ஒருவரின் மனதில் எவை நிரம்பி வழிகின்றதோ அதுவே அவர்களின் சொல்லாகவும், செயலாகவும் இருக்கும். இதையே நற்செய்தி வாசகம் "உள்ளத்தின் நிறைவே வாய் பேசும்" என்று எடுத்துரைக்கின்றது. நம்முடைய சொற்கள் பிறரை பக்குவப்படுத்தி, உற்சாகப்படுத்தும்போது நல்ல மனிதர்களாக மாறுகிறோம். நல்ல ஆன்மீக வழிகாட்டிகளை தெரிந்துக்கொள்வோம். பிறரை விமர்சிப்பதற்குமுன் நம்மை விமர்சிப்போம். உள்ளத்தை நல்ல எண்ணங்களால் பக்குவப்படுத்தி சொல்லையும், செயலையும் நேர்மையோடு செயல்படுத்த இன்றைய திருப்பலியில் சிறப்பாக செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், மறைபரப்பு பணியாளர்கள் அனைவரையும் ஆசீர்வதித்தருளும். குறிப்பாக எம் திருத்தந்தைக்கு நல்ல உடல்உள்ள நலமளித்து திருஅவையை நடத்தக்கூடிய போதுமான ஆற்றலை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பின் இறைவா, நாங்கள் குருட்டு வழிகாட்டிகளாய் இல்லாமல் சிறந்த ஆன்மீக வழிகாட்டிகளாக மாற உம்முடைய கற்பனைகளை நாங்களும் கடைப்பிடித்து, பிறரையும் நம்பிக்கையிலும், நல்வழியிலும் நடத்திச் செல்லும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பே உருவான இறைவா, இன்றைய திருப்பலியில் உம்முடைய பிரசன்னத்தில் வந்திருக்கும் எங்களின் எண்ணங்களையும், தேவைகளையும் உமது கனிவிரக்கத்தினால் ஆசீர்வதித்து நன்மையினால் நிரப்பிட வேண்டியும், நல்ல உடல்உள்ள நலனளித்து உமக்கேற்ற பாதையில் நாளும் நடத்திடத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 04.03.2025 புனித கசிமீர் நினைவு திருப்பலி

**முன்னுரை** திருமதி. லதா சுரேஷ்

இறையேசுவில் அன்புமிக்க சகோதரிகளே, சகோதரர்களே, இன்று திருஅவையானது புனித கசிமீர் என்பவரின் திருவிழாவைக் கொண்டாடி மகிழ்கிறது. போலந்து நாட்டு இளவரசரான இவர் 1458, அக்டோபர் மூன்றாம் நாள் க்ராக்கோ நகரில் பிறந்தார். இவரது பெற்றோருக்கு 13 பிள்ளைகள். இவர் மூன்றாவது பிள்ளை. அரச அரண்மனையில் வளர்ந்தபோதிலும் சுகபோகங்களை வெறுத்து ஒறுத்தல் முயற்சிகளை மேற்கொண்டார். திருப்பலி, திவ்விய நற்கருணை, இயேசுவின் பாடுகள், அன்னை மரியாள்மீது அளவற்ற பக்தி வைத்திருந்தார். ஏழைகளுக்கு அதிகம் உதவி செய்தார். தூய கற்பை இழப்பதைவிட சாக விரும்புகிறேன் என்பார்.

புனித கசிமீர் 13 வயதில் வரங்கேரியின் அரசராக நியமிக்கப்பட்டார். சிறப்பாக நீதியோடும், உண்மையோடும் ஆட்சி செய்த மகனுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பிய தந்தை ஜெர்மனி பேரரசர் மூன்றாம் பிரடரிக்கின் மகளைப் பேசி முடித்தார். தான் திருமணம் செய்யாமல் தனியாகவே இருக்க விரும்புகிறேன் என்று கூறி திருமணத்திற்கு மறுப்புத் தெரிவித்தார். இரவு நேரங்களில் பூட்டப்பட்டிருக்கும் ஆலயத்திற்கு முன் குளிரையும் பொருட்படுத்தாது பலமணி நேரங்கள் மண்டியிட்டு செபிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தார். அன்னை கன்னிமரியாள்மீது அளவற்ற பக்தியும் நம்பிக்கையும் கொண்டிருந்தார். இவர் இளைஞர்களின் பாதுகாவலராகவும், நீதிநெறி பிறழாத ஆட்சிக்கும், கற்பு நெறி தவறாத வாழ்வுக்கும் பெயர் பெற்ற கசிமீர் 1484 மார்ச் 4ம் நாள் காசநோயால் இறந்தார். நாமும் இவரின் வழியைப்பின்பற்றி தந்தைக்கு ஏற்ற மக்களாக வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் மற்றும் கிறிஸ்துவின் நம்பிக்கையாளர்கள்

அனைவரும் தங்களது அணுகுமுறையில் உமது திருமகன் இயேசுவின் இரக்க திருமுகத்தை வெளிப்படுத்தி, வெற்றியுடன் தங்களது பணிகளைச் செய்ய உமது அருள்வரங்களை அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

2. நல்வாழ்வின் நாயகனே இறைவா, நீதிநெறி பிறழாத ஆட்சியை நடத்தி மக்களின் துயர் போக்கிய புனித கசிமீர் வழியில் எம் நாட்டுத்தலைவர்கள், ஆட்சியாளர்கள் நீதிநெறி தவறாமல் மக்களின் குறைகளை நீக்கி நேர்மையோடும் தாராள மனதோடும் செயல்பட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. வழிநடத்தும் வானகத் தந்தையே இறைவா, எம் நாட்டில் வழி தவறிச்செல்லும் ஒவ்வொரு இளையோரையும் நீரே வழிநடத்தவும், புனித கசிமீர் தனது இளமைக் காலத்தில் பக்தியோடும், உதவி செய்யும் மனதுடனும் வாழ்ந்ததுபோல இவர்களும் வாழ்ந்திடவும் அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 05.03.2025 திருநீற்று புதன் - தவக்காலம் திருப்பலி

**முன்னுரை** திரு. செபாஸ்டின்

I. யோவே. 2: 12-18 II. 2கொரி. 5: 20-6:2 மத். 6: 1-6, 16-18

ஆண்டவர்மீது தன் நம்பிக்கையைக் கொண்டுள்ள சகோதர சகோதரிகளே, இன்று திருநீற்றுப் புதன், தவக்காலத்தின் துவக்கநாள், மனிதன் சாம்பலுக்கும் தூசிக்கும் சமமானவன் என்று நாம் உணரச் செய்யும் நாள். இது மனமாற்றத்தின் காலம். ஒருபாவி பரிதாபமாக இறப்பதை கடவுள் விரும்புவதில்லை. மாறாக, மனம்மாறி வாழ்வு பெறுவதையே விரும்புகின்றார். எசேயா 18:32ல் எவருடைய சாவிலும் நான் இன்பம் காண்பதில்லை என்கிறார். நாம் மனம்மாறுவதற்கு ஒரு தவமுயற்சி தேவைப்படுகிறது. அதற்காகத்தான் திருஅவை இத்தவக்காலத்தை நமக்குத் தருகிறது. நாம் மனம்மாறி கடவுளோடு ஒப்புரவாக வேண்டும். அவரது அருளில் நிலைத்திருக்க வேண்டுமென்பதே திருஅவையின் எதிர்ப்பார்ப்பு.

இன்று நாம் இறைவனின் குரலைக் கேட்டு, நாம் பாவநிலையை உணர்ந்து மனம்மாறி இறையுறவில் நிலைத்திருக்க இந்த தவக்காலத்தை முற்றும் பயன்படுத்துவோம். அதற்கான செயல்திட்டங்களை நற்செய்தியை இன்றைய நற்செய்தியில் இருந்து கற்றுக்கொள்வோம். நல்லறிவும், நல் இதயமும் பெற்று நம் இறைச்சாயலை புதுப்பித்துக்கொள்வோம். இதுவே நம் ஆன்ம வாழ்வின் குறிக்கோள். கிறிஸ்துவின் உயிர்ப்பு வாழ்வடைய தகுதி வேண்டி இப்பலியை உருக்கமுடன் முழுமனதுடன் ஒப்புக்கொடுப்போம். நம் தவம் வெறும் சிந்தனையில் மட்டும் அமையாமல் நம்பிக்கை நிறைந்த நற்செயல்களோடு இணைந்து செல்ல இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, எம் திருஅவைப் பணியாளர்களை உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். நற்செய்தயை புனிதத்தின் பெயரால் அதன்சாரம் இழக்கச்செய்யாமல் உள்ளதை உள்ளவாறு உமது மனநிலையோடு மக்களுக்கு நற்செய்தி அறிவிக்கவும், தங்கள் சான்று வாழ்வால் மக்களை தவவாழ்விற்கு அழைத்து வரவும் அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. எங்களின் இதயத்தின் ஆழத்தில் இருப்பரே, சிந்தனை, நம்பிக்கை, அன்பு போன்ற புண்ணியங்கள் எங்கு திசைமாறிக் கிடக்கின்றன என்பதை நன்குணர்ந்து மனம்மாறி தேவ புண்ணியத்தில் நிலைத்திருக்கவும் அருள்வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. மனமாற்றத்தின் ஆவியைத் தரும் உம்முன்னிலையில் தங்களையே தாழ்த்தி தன்நிலையை உணர்ந்து மனம் வருந்துவோருக்கு மனமாற்றத்தின் ஆவியை, புதுப்பிக்கும் ஆவியைத் தந்து மீண்டும் உம் பிள்ளைகளுக்குரிய இயல்பை நாங்கள் பெற்றிட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. சாவின் விளிம்பில் உள்ளவர்மீது ஒளியை உதிக்கச் செய்பவரே, தன் குற்றம் உணராத பிள்ளைகள்மீது, உம் கருணைக் கண்களை செலுத்தி, அவர்களின் குற்றம் உணர்ந்து தன்னையே நீதிமானாக நினைக்கும் மக்களும், மரணத்தின் பிடியில் தவிப்போருக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## 07.03.2025 புனித பெர்பெத்துவா, பெலிசிட்டி திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

இறையேசுவில் பிரியமான இறைமக்களே, இன்று நம் திருஅவை புனித பெர்ப்பெத்துவா, பெலிசித்தா ஆகிய இரு புனிதைகளைச் சிறப்பிக்கின்றது. புனித பெர்பெத்துவா உயர்குலத்தைச் சேர்ந்த பெண்மணி. கார்தேஜ் நகரைச் சேர்ந்த இவர் தனது 22வது வயதில் பால்குடி மாறா தனது குழந்தையுடனும், எட்டுமாத கருவைத் தன் வயிற்றில் சுமந்தும் தனது அடிமைப் பெண் புனித பெலிசித்தாளுடனும், வேத கலாபனை நடந்த காலத்தில் கிறிஸ்தவ நெறியைத் தழுவி திருமுழுக்குப் பெற்றார். புனித பெர்பெத்துவாவின் தந்தை கடுமையாக எதிர்த்தபோதும் கிறிஸ்து இயேசுவிடம் நம்பிக்கைக் கொண்டார். தங்களை மரணத் தீர்ப்புக்கு பலியாக்குவார்கள் என்றும், கொடூர மிருகங்களுக்கு இறையாக்குவார்கள் என்றும் தெரிந்தே அவர்கள் கிறிஸ்தவத்தில் இணைந்தார்கள். சுபேரிமூஸ் சேவேரு என்ற மன்னன் இவர்களுக்கு மரண தண்டனை விதித்தபோது புனித பெலிசித்தா இறைவனை மிக உருக்கமாக மன்றாடி தான் சிறையிலிருக்கும்போதே தன் குழந்தையைப் பெற்றெடுத்தாக வேண்டும்

என்று வேண்டினாள். ஏனெனில் அக்கால சூழலில் கருவுற்றிருக்கும் பெண்களைக் கொல்லக் கூடாது என்ற சட்டத்தின்படி தன்னால் மறைசாட்சியாக உயிர் துறக்க முடியாது என்று தெரிந்தே இறைவனை மன்றாடினாள். அவ்வாறே அவருக்குக் குறித்த காலத்துக்கு முன்பே குழந்தைப் பிறந்தது 07.03.203 அன்று மன்னனின் தீர்ப்பின்படி இருவரும் தலைவெட்டப்பட்டு கொல்லப்பட்டு மறைச்சாட்சியானார்கள். கார்த்தேஜ் நகர பாதுகாவலர்கள் என்றும், தாய்மார்களுக்கும், கருவுற்றிருக்கும் தாய்மார்களுக்கும் கால்நடை வளர்ப்போர், பண்ணைத்தொழிலாளர்கள் என்ற பலதரப்பினருக்கும் பாதுகாவலர்களாக போற்றப்படுகிறார்கள். உயிரையே இழக்க நேரிட்டாலும் கிறிஸ்து இயேசுவை ஆழமாக அன்பு செய்யும் மனநிலையைப் பெற பக்தியுடன் இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. வழிநடத்தும் அன்பு இறைவா, திருஅவையை அரவணைத்து காக்கும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் திருநிலையினர் யாவரும் கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொண்டவர்களாகவும், திருஅவையின் செயலாக்கங்களில் தங்களது சாட்சிய வாழ்வினால் இறைவனின் மாட்சிமையை உலகெங்கும் பரப்ப அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. எல்லோரையும் அன்பு செய்யும் இறைவா, இறைவன்பால் தாம் கொண்ட அன்பின் வெளிப்பாட்டில் உறுதி கொண்டவர்களாக, எத்துனை துன்பம் வரினும் மறைசாட்சியராக உயிர் துறந்த புனித பெர்ப்பெத்துவா புனித பெலிசித்தா போன்று நம்பிக்கையில் மேன்மை கொண்டவர்களாக வாழ அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. பாதுகாக்கும் இறைவா, நேர்மையற்ற அரசியல்வாதிகள், சமத்துவம் காணா இறுமாப்புமிக்கவர்கள், மக்களைப் பலவித அறிவிப்புகள் மூலம் கலக்கமடையச் செய்யும் காரியவாதிகள் ஆகியோர் தங்களின் தவறான செயல்பாடுகளைத் தவிர்த்து உமக்கேற்ற மக்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 08.03.2025 இறைவனின் புனிதர் புனித யோவான் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று நாம் உரோமை நகர் புனித பிரான்சிஸ் அவர்களின் நினைவைக் கொண்டாடுகிறோம். சிறுமி பிரான்சிஸ் தனது 11 வயதில் இருந்தே துறவியாக வேண்டுமென்ற எண்ணத்தில் வாழ்ந்து வந்தவர். அந்த தேவ அழைத்தலை உணர்ந்தவராய் தன் தந்தையிடம் தெரிவித்தபோது, அவரது முடிவு நிராகரிக்கப்பட்டு, திருமணம் செய்து வைக்கப்பட்டார். இருப்பினும் இல்லற வாழ்வில் கடமை தவறாமல் வாழ்ந்தாள். தனது கணவரின் இறப்பிற்குப் பின் தனது குடும்பப் பணியில் மேலும் அக்கரையோடு செயல்பட்டார். துறவறத்திற்கு

ஒப்பான வாழ்வைக் கடைப்பிடித்து துறவற சபையைத் துவங்கி அதன் வழியில் இறைப்பணியாற்றினார். நம் எண்ணமன்று, கடவுளின் எண்ணமே இறுதியானது என்பதை இப்புனிதையின் வாழ்வில் நாம் அறிந்து கொள்ளலாம். இன்றைய நற்செய்தி வாசகம் நமது பாவ நிலையையும், இறைவனின் இரக்கத்தையும் நன்கு பறைச்சாற்றுகிறது. கடவுளின் முன்னிலையில் எல்லா மனிதருமே பாவிகள்தான். இந்த உணர்வை நம்மில் எழுப்பவும் நாம் நம் வாழ்வை மாற்றியமைக்கவும் இந்த தவக்காலத்தில் தொடர்ந்து திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நம்பிக்கையின் ஆழத்தைக் காட்டிய இறைவா, எம் திருஅவைக்காகவும், திருத்தந்தைக்காகவும் மன்றாடுகிறோம். திருஅவைக்காக உழைக்கின்றவர்களுக்கு நீரே பக்கபலமாய் நின்று வழிநடத்தவும், பணியில் ஏற்படும் தடைகளைத் தகர்த்து நீதியோடும் நேர்மையோடும் செயல்பட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நம்பினோர் ஒருபோதும் கைவிடப்படுவதில்லை என்றவரே, உம்மீது ஆழ்ந்த நம்பிக்கையோடு நாங்கள் செய்கிற எந்தவொரு செயலும் பொய்த்துப் போவதில்லை. அது எப்போதும் நமக்கு வெற்றியே என்பதை உணர்ந்து, எங்களது நம்பிக்கையை ஆழப்படுத்த வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. ஆண்டவராகிய இயேசுவே, எம் வாழ்க்கையில் நாங்கள் சந்திக்கின்ற அச்சம், அவமானம், கலக்கம், குழப்பம், துயரம், சாவு போன்றவைகளில் எங்களின் நம்பிக்கை இழந்துவிடாமல் உம்மைப் பற்றிக்கொள்ள அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 09.03.2025 தவக்காலம் முதல் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. இச. 26: 4-10 II. உரோ. 10: 8-13 லூக். 4: 1-13

அன்பிற்கினியவர்களே, தவக்காலத்தின் முதல் ஞாயிறு திருப்பலி கொண்டாட்டம் சோதனைகளை வெல்ல அனைவரையும் அழைக்கின்றது. மனித வாழ்வு சோதனைகள் நிறைந்தது. முதல் பெற்றோர் முதல் இறைமகன் இயேசு வரையிலும் சோதனைகள் தொடர்கின்றன. கடவுள் சோதனைகளை நமக்குத் தருபவரல்ல. மாறாக, சோதனைகளைத் தருவது அலகை, அந்த அலகைத் தரும் சோதனைகளை சந்திக்க நம்மை அழைத்துச் செல்வது தூய ஆவியார். கடவுள் நம்மை இழுத்துச் செல்வதில்லை அழைத்துச் செல்கிறார் என்பதுதான் இன்றைய நற்செய்தி. எல்லாவற்றையும் செய்யும் வல்லமை கொண்ட இயேசு சாத்தானின் அதிகாரத்திற்குமுன் தன் இறைவல்லமையை இறைவார்த்தைகளால் வெளிப்படுத்துகிறார். தூய ஆவியானவரின் துணையால் இயக்கப்பட்டு இறைவார்த்தையால் சாத்தானின் சோதனையை வெல்கிறார்.

முதல் வாசகத்தில் "ஆண்டவரே இதோ நீர் எனக்குக் கொடுத்த நிலத்தின் முதற்பலனைக் கொண்டு வந்துள்ளேன் என்று சொல்லி, அதை உன் கடவுளாகிய ஆண்டவரின் முன்னிலையில் வைத்து அவரைப் பணிந்து தொழுவாய்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நம் மூதாதையர்களுக்குச் சோதனைகள் ஏற்பட்டபோது ஆண்டவரை நோக்கி குரல் எழுப்பினர், ஆண்டவர் அவர்களின் குரல் கேட்டார். இரண்டாம் வாசகத்தில், "ஆண்டவரின் திருப்பெயரை அறிக்கையிட்டு மன்றாடுகிறவர் எவரும் மீட்புப் பெறுவர்" என்ற இறைவார்த்தைக்கேற்ப நமது சோதனைகளை துன்பங்களை ஆண்டவரின் பாதத்தில் சமர்ப்பித்து செபிப்போம், நாம் சந்திக்கும் பாவச்சோதனைகள் துன்ப சோதனைகள் ஆகியவற்றை இக்கல்வாரி பலிபீடம் கொண்டு வந்து, இறைவன்முன் நம்மையே சமர்ப்பணம் செய்து செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. சோதனைகளை வென்ற ஆண்டவரே, இறைப்பணியாற்றும் திருத்தந்தையை உமது பாதம் சமர்ப்பிக்கின்றோம். அவரின் உடல்நிலை விரைவில் குணம்பெற்று உம் பணிபுரிய புதிய மனிதராக செயல்பட உம் தூய ஆவியாரின் அருட்கொடைகளால் நிரப்பி குணமளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கமுள்ள தந்தையே, எம் தாய் திருநாட்டையாளும் தலைவர்களையும், ஆட்சியாளர்களையும் ஆசீர்வதியும். எம் நாட்டில் நிலவும் தீமைகள், வன்முறைகள், பெண்களுக்கெதிரான குற்றங்கள் அனைத்திற்கும் எங்கள் சுயநலப்போக்கை விட்டுவிட்டு பொதுநல எண்ணத்தோடு வாழ்ந்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. "கொடுங்கள் கொடுக்கப்படும்" என்றவரே, எத்தனையோ மக்கள் தங்கள் வாழ்வாதாரங்களான உணவு, உடை, உறைவிடமின்றி வாழும் நிலையை காணும் நாங்கள் அவர்களின் ஏழ்மை, வறுமை நிலையை மாற்றிட எங்களிடம் இருப்பதை இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழும் பரந்த தாராள உள்ளத்தைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.
4. மனமாற்றத்தை விரும்புவரே எம் இறைவா, சொல்லிலும், செயலிலும் நேர்மையைக் கடைப்பிடித்து நாங்கள் எடுக்கின்ற தவமுயற்சிகளில் உண்மையான மனமாற்றத்தையும் ஆன்மீக எழுச்சியையும் கண்டுணர உமதருளைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 16.03.2025 தவக்காலம் இரண்டாம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. சாம்சன்

I. தொ.நூ. 15: 5-12,17-18.21 II. பிலி. 3: 17-4:1 லூக். 9: 28-36

ஆண்டவரில் பிரியமான சகோதர சகோதரிகளே, "நமக்கோ விண்ணகமே தாய்நாடு" தன்னுடைய வாழ்வில் உயர்ந்த இலட்சியங்களை அடைய விரும்பிய பலருக்கும் தடையாய் இருப்பது நம்முடைய பாவங்களே,

"இளைஞர் ஒருவர் குருவிடம் சென்று "குருவே எனது இலட்சியத்தை அடைய தடையாய் இருப்பது என்னுடைய பாவமே, நான் அதிலிருந்து விடுபட எனக்கு நல்ல வழியைக் காட்டும்" என்றார். குரு அவனை அழைத்துக்கொண்டு சிறிது தூரம் சென்ற பிறகு அருகிலிருந்த மரத்தில் வேகமாக ஏறினார். அதன்பிறகு ஐயோ என்னைக் காப்பாற்றுங்கள் என உரத்தக் குரலில் கத்தினார். குருவின் இந்தச் செயலைக் கண்டு இளைஞன் திகைத்து நின்றான். குருவைப் பார்த்து, குருவே நீர்தானே அதில் ஏறினீர், பின்பு ஏன் காப்பாற்றுங்கள் என்று கத்துகிறீர் என்றான். குரு, இளைஞனைப் பார்த்து இப்போது உனக்குத் தெரிகிறதா? உனது இலட்சியத்துக்குத் தடையாய் இருக்கும் பாவம் உமது இலட்சியத்தை தடை செய்யவில்லை நீதான் பாவத்தைப் பற்றிக்கொண்டு அதைவிடாமல் பிடித்துக்கொண்டிருக்கிறாய் என்றார். இளைஞனுக்கு அப்போதுதான் தன்னுடைய செயல் எப்படிப்பட்டது என்று புரிந்து, அதிலிருந்து விடுபட்டு உயர்ந்த இலட்சியத்தை அடைந்தான்.

ஆம், உயர்ந்த இலட்சியத்தை அடைய பாவத்தை விட்டுவிட வேண்டும். அதுபோன்று நமக்கு விண்ணகமே தாய் நாடாக இருப்பதால் மண்ணுலகு சார்ந்தவைப் பற்றி சிந்திப்பதை விட்டுவிட வேண்டும். இன்றைய நற்செய்தியில் இயேசுவின் தோற்றம் மாற்றத்தைக் குறித்து நாம் வாசிக்கின்றோம். இந்த நிகழ்வின் இறுதியில் "மேகத்தினின்று ஒலிக்கும் குரல் இவரே, இவரே என் மைந்தர் நான் தேர்ந்துக்கொண்டவர் இவரே இவருக்கு செவிசாயுங்கள்" என்று கூறுகிறது. கடவுள்மீது நம்பிக்கை சாதாரணமாக வந்துவிடுவதில்லை. அவரது வார்த்தையைக் கேட்க வேண்டும் (உரோ. 10:17). இன்றைய முதல் வாசகத்தில் ஆபிரகாம், ஆண்டவரின் வார்த்தையைக் கேட்கிறார் கேட்டதோடு நின்றுவிடாமல் அவர்மீது நம்பிக்கைக் கொள்கிறார். ஆதலால் நாம் ஆபிரகாமைப்போன்று ஆண்டவரின் குரலைக் கேட்க வேண்டும், அவர்மீது நம்பிக்கை வைக்க வேண்டும். அப்படிச் செய்தால் நாம் மண்ணுலகை சார்ந்தவற்றை எண்ணமாட்டோம். மாறாக கிறிஸ்துவோடு உயிர்த்தெழுந்தவர்களாய் விண்ணுலகை சார்ந்தவை பற்றியே எண்ணி அவற்றை நாடுவோம். நம்முடைய வாழ்க்கைக்குத் தேவையான ஆசிரைப் பெற்றுச் செல்ல இறைவனிடம் இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. வழிகாட்டும் ஒளியே, திருஅவையை வழிநடத்தும் எம் திருத்தந்தைக்கு பூரண உடல் நலத்தையும், நீடிய ஆயுளையும் கொடுக்க வேண்டுமென்றும், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் ஆசீர்வதித்து நற்செய்திப் பணியினை சிறப்பாக செய்ய அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் என்று கூறிய எம் அன்புத் தந்தையே இறைவா, இந்த தவக்காலத்திலே நாங்கள் மேற்கொள்ளும்

தவமுயற்சிகள், தவக்கால பயணங்கள் பிறருக்கு வழங்கும் தான தர்மனங்களை தாராளமனதுடன் செய்யவும், தேவையில் இருப்போருக்கு உதவிபுரியும் நல்மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தீமை உங்களை நெருங்காது என்று கூறி இறைவா, அனைத்து விதமான பாவகாரியங்களையும் விடாமல் பற்றிக்கொண்டிருக்கும் எங்களை பாவச்சூழலிலிருந்து முற்றிலும் விலகி, உமக்கேற்ற சாட்சிய வாழ்வு வாழத் தேவையான அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

4. நல்லாயனாம் இறைவா, ஆயன் தன் மந்தையைக் காப்பதுபோல, அரசாங்கத் தேர்வினை எழுத இருக்கும் மாணவச் செல்வங்களை ஆசீர்வதித்து, நல்ல முறையில் தேர்வினை எழுத, உடல் உள்ள நலமளித்து, நினைவாற்றலை தந்து தேர்வில் வெற்றிப்பெற ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 19.03.2025 புனித யோசேப்பு, மரியாவின் கணவர் பெருவிழா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. மாலா செபமாலை

I. 2சாமு. 7: 4-5.12-14.16 II. உரோ. 4: 13,16-18.22 லூக். 2: 41-51

இறையேசுவில் அன்பு உறவுக்கொண்ட சகோதர சகோதரிகளே, உங்கள் அனைவரையும் இப்புனித பலிக்கு இயேசுவின் பெயரால் இனிதே வரவேற்கின்றோம். இன்று நாம் புனித கன்னி மரியாளின் கணவர் குடும்பங்களின் பாதுகாவலர், புனித யோசேப்பின் திருவிழாவைக் கொண்டாடுகின்றோம். இறைவாக்கினர் நாத்தான் வழியாக தாவீதுக்கு யாவே கடவுள் தந்த செய்தி. "நீ உன் மூதாதையரோடு துயில் கொள்ளும் பொழுது உனது வழிமரபை உயர்த்தி அவனது அரசை நிலைநாட்டுவேன். உனது குடும்பமும், உனது அரசும் உறுதியாய் நிலைத்திருக்கும் என்றார்". அந்த தாவீதின் வழித்தோன்றலாக வந்தவர்தான் புனித யோசேப்பு. இந்த யோசேப்பின் வளர்ப்பு மகன்தான் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. புனித யோசேப்பின் தனிச்சிறப்பு வாய்ந்த குணநலன்களை நாம் நினைவுக்குக் கொண்டு வருவோம்.

இவர் ஓர் தச்சர், திருக்குடும்பத் தலைவர், நேர்மையுள்ள பண்பான கணவர், நீதிமான், பொறுப்புமிக்க தந்தை, ஏழ்மையிலும் நேர்மை தவறாதவர், இறைத்திருவுளம் நிறைவேற்றுவதில் தாமதமின்றி செயல்பட்டவர். தனக்கு நேர்ந்த வருத்தத்தையும், அவமானத்தையும் பொருட்படுத்தாமல் இறைத்திட்டத்திற்கு முற்றும் கீழ்ப்படிந்தவர். இவரது பொறுப்பிலே இயேசு பிறந்தார், வளர்க்கப்பட்டார். புனித யோசேப்பின் மரணத்திற்குப் பின்பு, இயேசுவின் இறையாட்சி நிலைவாழ்வு தரும் இறையாட்சியாக நிலைப்பெற்றது. தாவீதுக்குச் சொல்லப்பட்ட வாக்கு யோசேப்பு இயேசுவில் நிறைவேறியது. இப்பேறுபெற்ற புனித யோசேப்பின் விழாவினைச் சிறப்பிக்கும் நாம் அவரிடம் விளங்கிய நற்பண்புகளை

நமதாக்கிக் கொள்ளவும், சிறப்பாக ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிதல் எனும் புனிதப் பண்பில் திருஅவையும் நம் குடும்பங்களும் என்றும் அவரைப் பின்பற்றி வாழ அருள் வேண்டுவோம். திருஅவையோடு பாதுகாவலராக இருக்கும் புனித யோசேப்பு நம் பங்கு, குடும்பங்கள் அனைத்திற்கும் பாதுகாவலராக இருக்கவும் புனித யோசேப்பு வழியில் இயேசுவை ஆதாயமாக்கிக் கொள்ளவும் இப்பலியில் உறுதியுடன் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. **நம் தாய் திருஅவைக்காக மன்றாடுவோம்:** எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் புனித யோசேப்பிடம் விளங்கிய நற்பண்புகளை முன்மாதிரியாகக் கொண்டு தங்கள் வாழ்வில் இறையனுபவம் பெறவும், திருஅவை எனும் பெரிய குடும்பத்தை இறைத்திட்டத்தின்படி துடிப்புடன் நடத்திச்செல்லவும் அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. நல்லாயனாம் இறைவா, மக்களையாளும் அதிகாரம் பெற்றவர்களும், வழிநடத்தும் ஆட்சியாளர்களும் புனித யோசேப்பு போன்று கரிசனையுடனும், நேர்மையுடனும் மக்களை வழிநடத்தத் தேவையான ஆசியைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. வாடியவருக்கு குளிரூட்டுபவரே, வேலையில்லாமல் தவிக்கும் இளைஞர், இளம் பெண்களுக்கு நல்லதொரு வேலை வாய்ப்புக் கிடைக்கவும், வேலையில் இருப்போர் உழைப்பை வெளிப்படுத்தி படைப்பை நிறைவுக்குக் கொண்டுச் செல்லும் உன்னத உணர்வுடன் உழைக்கும் வரம்வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
4. அருள்பொழியும் இறைவா, ஒவ்வொரு குடும்பமும் இறை நம்பிக்கையுள்ள குடும்பமாய் விளங்க வேண்டுமென புனித பவுல் செபித்தார். திருக்குடும்ப முன்மாதிரியாகக் கொண்டு, அனைவரின் குடும்பங்களிலும் இறைபிரசன்னம் நிறையும் விதத்தில் நற்பண்பு, நற்செயல்களால் ஒருவரையொருவர் தாங்கி வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 23.03.2025 தவக்காலம் 3ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. லதா சுரேஷ்

I. வி.ப. 3: 1-8, 13-15 II. 1கொரி. 10:1-6, 10-12 லூக். 13: 1-9

இறையேசுவில் பிரியமானவர்களே, நாம் ஒவ்வொரு நாளும் கண்ணயர்ந்து விழிப்பது இறைவனுடைய கருணையினாலே. ஒவ்வொரு நாள்களையும் நம் பாவங்களுக்குத் தக்கதாய் அமையாமல் இறைவனின் கருணையால் நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம். இன்றைய திருப்பலி வாசகங்கள் அனைத்தும் மனம் மாறுங்கள் விண்ணரசு நெருங்கிவிட்டது என்பதை நமக்கு உணர்த்துகிறது. நாம் எதிர்நோக்கியிருக்கும் விண்ணரசு

மண்ணுலக அரசைப் போன்றது அல்லாமல் அமைதியும், ஆனந்தமும், கொண்டாட்டமும் நிறைந்தது. அதனாலேயே நம் ஆண்டவராகிய இயேசு நான் உங்களுக்கென்று புதியதொரு உலகைப் படைப்பேன், நான் மீண்டும் வந்து உங்களைக் கூட்டிச் செல்வேன் என்கிறார். அன்று மோசேவைத் தேர்ந்தெடுத்து அவர் வழியாக இஸ்ரயேலரின் கூக்குரலைக் கேட்டேன், அவர்களின் கண்ணீரைக் கண்டேன், அவர்களை நான் விடுவிப்பேன். தேனும் பாலும் பொழியும் நாட்டிற்குகொண்டு சேர்ப்பேன் என்றார். அவர் இரக்கமும் அருளும் கொண்டவர். நாம் வாழும் இப்பூமியில் உள்ள அனைத்தும் அழிந்துப்போகக்கூடியது, எனவே நாம் மண்ணுலகில் செல்வம் சேர்ப்பதைவிட விண்ணுலகில் செல்வத்தை சேர்த்து வைப்போம். மண்ணுலக செல்வத்திற்காக அழியா ஆன்மாவை பாவத்திற்குட்படுத்தும் நிலை மாறிட நமக்கு கொடுக்கப்பட்ட இந்த தவக்காலம் மனமாற்றத்தின் காலமாக ஏற்றுக்கொண்டு தூய வாழ்வு வாழ நம்மையே இறைவனிடம் ஒப்படைத்துச் செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. வழிநடத்தும் அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் உமது பிரசன்னத்தை முழுமையாக உணர்ந்து பணிவாழ்வில் மனந்தளராமல் வாழ்ந்திடவும், தங்களுக்கு கொடுக்கப்பட்ட இறையரசுப் பணியை நிறைவாக செய்திட வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. முழுமையின் முதல்வரே எம் இறைவா, இனிமை நிறைந்த உலகைப்படைத்து, அவற்றை அனுபவிக்க அனைத்தையும் படைத்து மகிழ்ந்தவரே, இன்று அறிவியல் ஆராய்ச்சி என்ற பெயரில் நீர் படைத்தவற்றை அழித்துக்கொண்டிருக்கும் இந்நிலைமாறி மனித நேயமும், இறையச்சமும் கொண்டவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. மன்னிக்கும் மனம்கொண்டவரே, மனமாற்றத்திற்காக கொடுக்கப்பட்ட இந்நாள்களை நாங்கள் முழுமையாக எங்களின் தவறினை உணர்ந்து, உம் திருவுளத்திற்கேற்ப பாவ சிந்தனைகள், பாவநாட்டங்களை விடுத்து, மனம்மாறி உம் இறையரசுப் பணியினை கடைப்பிடித்து, அதன்படி வாழ அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் என்றவரே, குழந்தைகள் தங்களை முன்னிலைப்படுத்தும் உலக ஞானத்தை மட்டும் கொடுக்கும் சூழ்நிலையை மாற்றி, இறைத்திருவுளத்திற்கேற்ப உம்மை முழுமையாக அறிந்து உம் இறையரசை கட்டியெழுப்பும் தூண்களாக வாழவும், வளரவும், தூய ஆவியாரின் கொடைகளை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 25.03.2025 ஆண்டவரின் பிறப்பின் அறிவிப்பு பெருவிழா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

I. எசா. 7: 10-14, 8:10 II. எபி. 10: 4-10 லூக். 1: 26-38

ஆதிப்பெற்றோர் செய்த தொடக்க நிலைப்பாவத்திலிருந்து மீட்புப்பெற, ஆயிரமாயிரம் ஆண்டுகள் காத்திருந்து, கன்னிமரியாவுக்கு மங்கள வார்த்தைச் சொல்லும் பெருவிழாவை திருஅவைக் கொண்டாட நம்மை அழைக்கிறது. காலம் நிறைவேறியபோது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மையெல்லாம் மீட்டு நம்மைக் கடவுளின் பிள்ளைகளாக்குமாறு கடவுள் பெண்ணிடம் பிறந்தாக வேண்டும் (கலா.4:4) என்பது மீட்புத் திட்டம். காலம் நிறைவேறிவிட்டது கடவுள் கன்னிமரியாவிடம் தூது அனுப்புகிறார். தூதரின் வாழ்த்துரை மீட்பு வரலாற்றில் மங்களகரமான தருணமாக அமைகிறது. கடவுளே தன் வானதூதரை மரியாவிடம் அனுப்பி வாழ்த்துகிறார். மரியாவின் வாழ்வில் அவர் முழு சுதந்திரத்துடன் இறைத்திட்டத்தை ஏற்று கடவுளோடு உடன் உழைப்பாளர் (1கொரி. 3:9) என்ற மனநிலையோடு மற்றெந்த மானிடப் பிறவியையும்விட வெகுவாய் இறையருளோடு ஒத்துழைக்கிறார்.

கடவுளின் ஒட்டுமொத்த மீட்புத்திட்டமும் (தொ.நூ. 3:15, கலா.4:4) மரியாவின் ஒத்துழைப்பைச் சார்ந்திருந்தது. இந்த ஒத்துழைப்புதான் மனித குலத்திற்கான மீட்பின் கதவு திறக்கப்படுவதற்குக் காரணமாயிருந்தது. பேராயர் புல்டன் ஷீன் அவர்கள் இது குறித்துக் காட்டும்போது "எப்படி முதல் மனிதனின் வீழ்ச்சி சுதந்திரமான நடவடிக்கையாக இருந்ததோ, அதுபோலவே மனித மீட்பும் சுதந்திரமாக நடை பெறவேண்டும். மரியாவுக்குத் தூதனுப்பிய அந்த நிகழ்வில் கடவுள் தான் படைத்த உயிரிடம் (மரியாவிடம்) தன்னை இந்த மனிதத்துக்குள் இணைத்துக்கொள்ள உதவுமாறு, மரியாவின் சுதந்திரமான ஒத்துழைப்பை நாடினார்" என்று சொல்கிறார். மேலும் மரியாவைத் தன் தாயாகத் தேர்ந்துக்கொள்கிறார். எனவே நாமும் இயேசுவின் தாய் மரியாவை நம்முடைய தாயாக ஏற்றுக் கொண்டு நமது மீட்புக்கு முழுமனதோடு ஒத்துழைக்க பக்தியோடு இப்பெருவிழாத் திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் தாய் திருஅவையின் பணியாளர்கள் அனைவரும் இந்த ஏழு புனிதர்கள் வாழ்ந்த சாட்சிய வாழ்வை வாழ்ந்து இறை மக்களை இறைவன் பால் ஈர்த்து புதுயுகம் புத்தாண்டில் மலர வளர உம்மை மன்றாடுகிறோம்
2. பாசத்தால் எம்மை ஈர்க்கும் இறைவா, உலக மக்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு உமது அன்பு வழியில் பயணிக்கவும் ஒருவரையொருவர் புரிந்துக்கொண்டு விட்டுக்கொடுத்து வாழும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. உறுதிப்படுத்தும் இறைவா, இன்றைய காலக்கட்டத்தில் வாலிப பிள்ளைகள் தங்களின் மனம் போன போக்கில் குடும்பம், சமூகம், உலகு இன்ப நாட்டங்களில் மூழ்காமல் இறைப் பற்றில் ஆழமாக வேரூன்றி வாழ உமது இரக்கம் கருணை வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 26.03.2025 புனித லட்ஜர் திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று திருஅவை புனித இலட்ஜர் நினைவு விழாவைக் கொண்டாடுகிறது. இவர் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு நம்பிக்கையுள்ள கிறிஸ்தவர்களாக வாழ்ந்த திரு. கியாட்கிரிம், திருமதி. லியாட்பர்க் பிறந்தவர். பரம்பரை கிறிஸ்தவர்கள். கி.பி. 753ம் ஆண்டு ஜெர்மனியின் திருத்தூதர் என்றழைக்கப்படும் போனிபாஸ் மறைசாட்சியாக மரித்ததைக் கண்ட இலட்சர் போனிபாஸ் அவர்களின் உறுதியான நம்பிக்கை வாழ்வில் மிகவும் ஈர்க்கப்பட்டு, தானும் மறைசாட்சியாக வாழ உறுதிகொண்டார். அவருடைய விருப்பத்தின்படி அட்ரெச்ட் நகர் ஆயர் இல்லத்தில் உள்ள பள்ளிக்கு அனுப்பப்பட்டார். இந்த பள்ளி 756 அல்லது 757ல் அருள்திரு கிரகோரி அவர்களால் தோற்றுவிக்கப்பட்டு சிறப்பாக இயங்கிக்கொண்டிருந்தது.

767ல் கிரகோரியார் ஆயர் பதவியை ஏற்கவில்லை. இங்கிலாந்திலிருந்து தனக்கு வேதபோதகத்தில் உதவி செய்ய வந்த அருள்திரு அலுபெர்ட் அவர்களை யார்க் நகருக்கு ஆயராக திருநிலைப்படுத்தினார். லட்ஜரும், எதில்பொட்டும் தியாக் கோன்களாக திருநிலைப்படுத்தப்பட்டு ஆயருக்குத் துணையாக இறைப் பணியாற்றினார்கள். இலட்ஜர் அருள்திரு. அல்குயின் பராமரிப்பில் படிப்பையும் தொடர்ந்தார். ஆனால் ஒரு வருடத்திற்குப்பன் அட்ரெக்சிட் நகருக்குத் திரும்பிவிட்டார். அதற்குப்பின் மீண்டும் படிப்பைத் தொடர வாய்ப்பளிக்கப்பட்டது. அல்குயினோடு நட்பை மேலும் வளர்த்து இறைப்பணியும் ஆற்றினார். 792ல் ஆங்கிலோ காக்சன் பிரிவினருக்கும் மிரிசியன்ஸ் பிரிவினருக்கும் வேதபோதக கலவரம் மூண்டது. இலட்ஜர் விலையுயர்ந்த புத்தகங்களோடு, தன்னுடைய பாதுகாப்பின்பொருட்டு, மார்ட்டின்ஸ் படிப்புக்குத் திரும்பி விட்டார்.

775வரை அருள்திரு. கிரகோரியார் இறக்கும்வரை அங்கிருந்தார். அருள்திரு கிரகோரியார் வாழ்க்கை வரலாற்றை எழுதிக்கொண்டிருந்த நேரத்தில் இம்மதக்கலவரம் நடை பெற்றது. கலகக்காரர்களால் சேதப்படுத்தப்பட்ட ஆலயங்களை செப்பனிட தேவன்டர் நகருக்கு இலட்ஜர் அனுப்பப்பட்டார். அந்த ஆலயத்தைக் கட்டிய வேதபோதக குரு லெபுனஸ் திருப்பண்டத்தையும் மீட்டெடுத்தார். பிறகு கல்விப் பணிக்காக இலட்ஜர் மார்ட்ன்ஸ்டிப் நகருக்கு திரும்பி விட்டார். மற்றவர்கள் அழிக்கப்பட்ட ஆலயங்களை செப்பனிட வடக்கு பகுதிக்கும் மேற்கு பகுதிக்கும்

அனுப்பப்பட்டார். ஜெர்மனியின் அப்போஸ்தலர் போனிபாஸின் மறைசாட்சி இறப்பு, இலட்சருக்குப் புனித வாழ்வைத் தந்ததுபோல் நாமும் நற்செய்திப் பணியிலும் கல்விப் பணியிலும் வாழ இபக்தியுடன் இன்றைய திருப்பலியில் பங்கேடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. மறைசாட்சியரை உருவாக்கிய இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை உம்மிடம் ஒப்படைக்கின்றோம். விரைவில் உடல்நிலை குணம் பெற்று உம் மந்தையை பேணிபாதுகாத்து வழிநடத்த தேவையான உம் தூய ஆவியாரின் அருள்கொடைகளை பொழிந்து குணப்படுத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. நம்பிக்கையின் தந்தையே இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் மக்களின் நலன்கருதி, தங்களிடம் ஒப்படைக்கப்பட்டவர்களை சுயநலத்தோடு செயல்படாமல், நேரிய பாதையில் வழிநடத்த தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்புத் தந்தையே இறைவா, பங்கு மக்கள் அனைவரும் இன்னல்கள், சோதனைகள், கடன்தொல்லைகள், தீராத நோய்களால் வேதனைப்படுவோர்கள் அனைவரையும் உமது கருணையினால் இவர்களின் பிரச்சனைகளிலிருந்து விடுவித்தும், குணப்படுத்தும் படியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 27.03.2025 எகிப்து நாட்டு புனித யோவான் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

இறை இயேசுவின் பிரியமானவர்களே, இன்றைய நாளில் நமது திருஅவை புனிதர்களான புனித ரூபர்ட், புனித ஜான் ஆப் எகிப்து ஆகியோரை சிறப்பிக்க நம்மை அழைக்கிறது.

**புனித ரூபர்ட்:** சல்ஸ்பெர்க் மாநில புனிதர் புனித ரூபர்ட் மடாதிபதியும் சல்ஸ்பெர்க் மாநில ஆயருமாவார். கி.பி. 660ல் பிறந்து 27.3.710ல் இறந்தவர். பாரம்பரியங்களின்படி புனித ரூபர்ட் "பிரான்கிஷ் மெரோவிஞ்சியன்" அரக குடும்பத்தின் வழித்தோன்றலாவார் புனித பீட்டர் துறவு மடத்தினை புணரமைத்தவர். புனித ரூபர்ட் கல்வி மற்றும் அநேக சீர்த்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார். உள்ளூர் மக்களை கத்தோலிக்கத்திற்கு மனமாற்றினார். பாழ்ப்பட்டுப்போன உரோம் நகரமான ஜீவாவும் என்னும் நகரத்தை சல்ஸ்பெர்க்காக மாற்றி அங்கு பேராலயம் ஒன்றை நிர்மாணிக்க அடித்தளம் அமைத்தார். சல்ஸ்பெர்க், ஆஸ்டிரியா, பவேரியா, கரின்த்தியா என்னும் நகர்களின் திருத்தூதர்களாக அழைக்கப்பட்டவர். புனித ரூபர்ட் மரித்த கி.பி. 710, மார்ச் 27 அன்று உயிர்த்தெழுந்த இயேசுவின் ஞாயிறாக கொண்டாடப்பட்டது.

**எகிப்து நாட்டு புனித யோவான்:** இவர் கி.பி. 305ல் ஒரு ஏழைத் தச்சரின் மகனாக பிறந்தார். தன்தையிடம் தக்சனாக பயிற்சி பெற்றார். பின் தனது 25ம் வயதில் ஒரு துறவியின் வழிகாட்டுதலால் துறவியானார். அவரிடம் 10வருடம் துறவற பயிற்சிப்பெற்று அவர் இறந்தபின் ஐந்து ஆண்டுகள் பயணங்களை மேற்கொண்டு பல மடங்களை பார்வையிட்டார். பின் "லைகோபோலிஸ்க்கு" அருகிலுள்ள ஒரு குன்றின் உச்சியில் பாறைகளை செதுக்கி 3அறைகள் அமைத்து, ஒரு சன்னலை அமைத்து, திறந்து அதன்வழி யாக மக்களிடம் தொடர்பு கொண்டு வாரம் இருவேளை உணவும் தண்ணீரும் பெற்று அவர்களுக்கு மறையுரை நடத்தியும், சேபதப வாழ்க்கையும் தியானமும் செய்து வந்தார். சன்னல் வழியாகவே நற்செய்தி போதனைகளையும் அளித்து வந்தார். தனது தீர்க்கதரிசனம் மூலம் எதிர்காலத்த முன்னறிவிக்கவும் தேர்வு பெற்றவராக திகழ்ந்தார். சோதனைகளை தவிர்ப்பதற்காக பெண்களை பார்ப்பதை தவிர்த்தவர். தனது கடைசி மூன்று நாட்களை உணவு உண்ணாமல் தியானத்திலேயே மரித்தார். தனது 50 வருடங்களை பழங்களும், காய்கற்கள் மட்டுமே உண்டு வந்தவர். கி.பி. 394 இறைவனடி சேர்ந்தார் இத்தகைய புனிதர்களின் அரும்பாடுகளையும், பணி செயல்களையும் நினைவில் நிறுத்தி இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்புத் தந்தையே, உம் திருஅவையின் திருப்பணியாளர்களான, திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள் இருபால் துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் இயேசுவின் நற்செய்தி போதனைகளை மனதில் நிறுத்தி கடமை உணர்வோடு செயல்படத் தேவையான ஆற்றலை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. தூய்மையின் இறைவா, இவ்வுலக வாழ்வில் இறைபக்தியைசிறிதளவும் நாடாமல் மாய கவர்ச்சிகளின் ஆர்வம் கொண்டு சுயநல சாத்தானின் பிடியில் சிக்குண்டு வாழும் இறைமக்களின் உள்ளங்களில் தூய்மை, நம்பிக்கை, இறைபக்தியோடு வாழ்வில் உம்மையே முழுமன உறுதியோடு பற்றிக்கொண்டு வாழும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தியாகத்தின் ஊற்றே எம் இறைவா, குடும்ப உறவுகளில் சுயநலம் என்ற கொடிய சிந்தனை நிலவிவரும் இக்காலக் கட்டத்தில் வயதான பெற்றோர்கள் பெறும் அவதிக்குள்ளாகாமல் அவர்களை அன்புள்ளத்தோடு பாதுகாத்து, பராமரிக்கும் தாராள உள்ளம் கொண்டவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 29.03.2025 அரிமத்தியா ஊர் புனித யோசேப்பு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. மாலா செபமாலை

இறையேசுவின் இனிய சகோதர சகோதரிகளே, இன்று யூதேயாவிலுள்ள அரிமத்தியா ஊரைச் சேர்ந்த புனித யோசேப்பின் விழாவைக் கொண்டாட அழைக்கப்பட்டுள்ளோம். திருவிவிலிய நற்செய்தியாளர்களின்படி இறைமகன் இயேசுகிறிஸ்துவின் மரணத்திற்குப் பின் இவரை அடக்கம் செய்தவர் அரிமத்தியாவின் யோசேப்பு. இவர் நான்கு நற்செய்தியாளர்கள் எழுதப்பெற்ற நற்செய்திகளில் வலம் வருகின்றார். மாற்கு 15:43ல் இவர் மதிப்பிற்குரிய தலைமைச்சங்க உறுப்பினர் எனவும், இறைனுடைய வருகைக்காக காத்திருந்தவர் எனவும் குறிப்பிடப்படுகின்றார். மத்தேயு 27:58ல் இவர் இறைமகன் இயேசுவின் மறைமுகச் சீடராய் வாழ்ந்தார் எனக் குறிப்பிடுடப்படுகின்றது. யோவான் 19:38ல் இவர் இறைமகன் இயேசுகிறிஸ்துவின் அன்பிற்குரிய சீடர் எனவும், யூதருக்கு அஞ்சி தன்னை இயேசு கிறிஸ்துவின் சீடர் என வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளவில்லை.

இயேசு கிறிஸ்துவின் திருவுடல் சிலுவையிலிருந்து இறக்கி கொண்டுபோக அரிமத்தியா யோசேப்பு பிலாத்துவிடம் அனுமதிக்கேட்டார். இவர் நூற்றுவர் தலைமைக்கு அதிபதி என்பதால் இவருக்கு அனுமதி வழங்கினார். இவரிடம் வந்த "நிக்கோதேமு" என்பவர் வெள்ளைப்போளமும், சந்தளத் தூளும் கலந்த வாசனைப்பொருட்களை 30 கிலோ கொண்டு வந்தார். இவர்கள் இந்த வாசனைப் பொருட்களைக் கொண்டு யூதமுறைப்படி இயேசுவின் திருவுடலை, வெள்ளைத்துணியால் உடலைமூடி, இவ்வாசனை திரவியங்களையும் வெள்ளைத்துணியால் கட்டி கல்லறையின் வைத்து, வாயிலைப் பெரிய பாறையினால் மூடினார்கள்.

அரிமத்தியா யோசேப்பு தனது 86வது வயதில் இறந்தபோது தனது இறுதி ஊர்வலத்தில் இவரது திருவுடலை "ஆறு மன்னர்கள்" சுமந்து சென்று, இறைபக்தியோடு நல்லடக்கம் செய்தனர். "என்னை விசுவசித்து என் வழியில் நடந்து தூய்மையாக வாழ்வோரை நான் கைவிடமாட்டேன், என் உள்ளங்கையில் தாங்குவேன்" என்னும் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளுக்கேற்ப வாழ்ந்து மரித்த இப்புனிதர்போல் இறைமகன் இயேசு கிறிஸ்துவை விடாமல் உறுதியுடன் பற்றிக்கொண்டு வாழ வேண்டுமென்று இத்தெய்வீகத் திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவியர் அனைவரும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மந்தையை பொறுப்புடனும், பாதுகாப்புடனும் நல்வழியில் நடத்திச் செல்ல, உமதாற்றலைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. படைப்பின் பரம்பொருளே எம் இறைவா, உலகிலுள்ள மக்கள் அமைதியாக, ஒற்றுமையாக, சமாதானத்தோடு வாழவும், துன்பங்கள், சவால்களுக்கு மத்தியில் உம்மை முழு நம்பிக்கையோடு பின்பற்றி பயணிக்கவும், அவர்களுக்குத் தேவையான மனவலிமையையும், தைரியத்தையும், நம்பிக்கையையும் அளித்தருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. தூய தந்தையே, தீமைகளின் ஆதிக்கத்தில் இருக்கும் எம்மக்களை உமது தலைமைப்பீட ஒளியில் நிறைத்து நன்மையின் பாதையில் நாங்கள் நடக்க அருள்புரியுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 30.03.2025 தவக்காலம் 4ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. 1யோசுவா 5: 9,10-12 II. 2கொரி. 5: 17-21 லூக். 15: 1-3, 11-32

இன்றைய முதல் வாசகத்தில் இஸ்ரயேல் மக்கள் கானான் தேசத்தில் உழைப்பின் பலனை உண்கிறார்கள். மகிழ்ச்சி கொள்கிறார்கள். கடவுளின் வாக்குறுதியில் நம்பிக்கைக்கொண்டு புதுவாழ்வைப் பெற்றுக் கொள்கிறார்கள். இரண்டாம் வாசகத்தில் இயேசு கிறிஸ்து வழியாக நாம் புதிய படைப்பாக மாற்றப்பட்டிருக்கிறோம். தந்தையாம் கடவுள் நமது குற்றங்களைப் பொருட்படுத்தாமல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக நம்மை அவரோடு ஒப்புரவாக்கினார் என்பதை புனித பவுல் நினைவூட்டுகிறார். நற்செய்தியில் மனமாற்றத்தைக் குறிக்கும் "காணாமற்போன மகன் உவமையைப் பற்றி படித்து சிந்திக்கிறோம். மனம் வருந்துதல், திரும்பி வருதல், விருந்தில் பங்கு பெறுதல்" என்ற மூன்று முக்கியக் கருத்துக்கள் இயேசு கூறும் இந்த உவமையில் இடம் பெறுகிறது.

**பாவத்திற்காக மனம் வருந்தி மன்னிப்பு பெறுவது:** "என் தந்தையின் கூலியாட்களுக்குத் தேவையான மிகுதியான உணவு இருக்க நான் இங்குப் பசியால் சாகிறேனே என்று கூறும் வார்த்தைகள் மூலம் காணாமற்போன மகன் பாவத்திற்காக மனம் வருந்துகிறான். 2. தந்தையிடம் திரும்புதல் "இஸ்ரயேலே உன் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வா" (யோவே 2:12) இறைத்தந்தையின் ஆழமான அன்பையும் அவருடைய நன்மைத் தனங்களையும் உணர்ந்து வருதல் இங்கும் நடைபெறுகிறது. தனது தந்தையின் கனிந்த அன்பையும், இரக்கத்தையும் உணர்ந்து தந்தையிடம் வரும் நிலை. "நான் புறப்பட்டு என் தந்தையிடம் போய் "அப்பா கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன்" (லூக். 15:18-19).

எந்த ஒரு மனந்திரும்புதலும் மகிழ்ச்சியையும் கொண்டாட்டத்தையும் அடிப்படையாகக் கொண்டு இருக்க வேண்டும். "தந்தை தம் பணியாளரை நோக்கி, முதல் தரமான ஆடையைக் கொண்டு வந்து இவனுக்கு உடுத்துங்கள், இவனுடைய கைக்கு மோதிரமும், காலுக்கு மிதியடியும் அணிவியுங்கள், நாம் மகிழ்ந்து விருந்து கொண்டாடுவோம். ஏனெனில் என் மகன் இறந்துபோயிருந்தான், மீண்டும் உயிர் பெற்று

வந்துள்ளான், காணாமற்போயிருந்தான், மீண்டும் கிடைத்துள்ளான் (லூக். 25:24) ஆகவே, நம் இறைத்தந்தையைப் போன்று நாமும் இரக்கம் நிறைந்த மனதுடன் பிறரை நிபந்தனையின்றி மன்னித்து ஏற்றுக்கொள்ளும் வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்லவரே, உம் திருமகனை தலையாயக் கொண்டு பயணிக்கும் உம் திருஅவையானது அவர் கற்பித்த அன்பு, நீதி, இரக்கம், மற்றும் பரிவுள்ளத்தோடு தன்னை நாடி வரும் இறைமக்களை அரவணைத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. என்றும் வாழும் எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் தம் மக்களை பணத்தின் அடிப்படையில், பதவியின் அடிப்படையில், மதத்தின் அடிப்படையில் பிரித்தாளாமல் நல்குணத்தோடும் உயரிய உள்ளத்தோடும் மக்களுக்கான ஆட்சியை தந்திட் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்
3. "மன ஒற்றுமைகொண்டிருங்கள், எல்லோருடனும் அமைதியுடன் வாழுங்கள்" என்ற இறைவார்த்தைக்கேற்ப எங்கள் உறவுகள் ஒவ்வொருவரோடும் அருகில் வாழும் மாந்தரோடும் பகைமைப் பாராட்டி வாழ்ந்து வரும் நிலை மாறி, உம் அன்புக்கட்டளையைக் கடைப்பிடித்து அனைவருடனும் அமைதியான முறையில் வாழும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. சாவைவென்று வாழ்வளிக்க வந்தவரே எம் இறைவா, எம் பகுதியில் அறுவடை செய்யப்பட்ட தானியங்களுக்கு நல்ல விலைக்கொடுத்து வேளாண்மை பெருகவும், பொருளாதாரம் ஏற்றம் பெறவும், விவசாயிகளின் விலையேற்றம் பெறவும், அன்றாட வாழ்வில் மக்கள் சந்திக்கும் பல பிரச்சனைகளிலிருந்து விடுதலையளித்து மகிழ்வோடு வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

## புனிதத்தில் வழிநடத்தும் தவமும், ஒறுத்தலும்

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

இறைமகன் இயேசுவை வரவேற்க திருவருகைக் காலத்தில் நம்மையே நாம் தயார் செய்தோம். இயேசுவின் பிறப்பு விழாவைக் கொண்டாடி அகமகிழ்ந்தோம். மனுவுருவான இயேசு நம்மோடு தங்கி, நம்மைப் பாதுகாப்பாக வழிநடத்தி வருகின்றார் என்னும் மகிழ்வில் திளைத்திருக்கிறோம். மனுவான இறைவன் நாம் அனைவரும் இம்மை வாழ்வில் மட்டுமல்ல, மறுமையிலும் அவரோடு ஒன்றித்து வாழ, மகிழ்ந்து வாழ தமக்கென விண்ணகத் தந்தை காட்டிய ஒரு தனி வழியைப்

பின்பற்றினார். அவர் வழியைப் பின்பற்றி அவரைப் பிரதிபலித்து நிலையான வாழ்வைப் பற்றிக்கொள்ள வழிகாட்டும் காலம்தான் தவக்காலம். இந்தத் தவக்காலம் திருநீற்றுப் புதனோடு ஆரம்பமாகிறது. தவம் என்பது என்ன? இந்த தவக்காலத்தை நாம் எப்படி சந்திக்கப் போகிறோம்?

**"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை**
**ஆற்றே தவத்திற்கு குரு" (குறள் 261)**

தனக்கு வரும் துன்ப துயரங்களையும் பொறுமையோடு ஏற்றுக் கொண்டு வாழ்வதும், பிற உயிர்களுக்கு எவ்வித தீமையும் செய்யாமலிருப்பதே தவத்தின் இலக்கணம் என்று குறிப்பிடுகின்றார். இதற்கும் மேலாக இறைமகன் இயேசு "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" (மாற்கு 8: 34) என மொழிகின்றார். ஒவ்வெரு மனிதனின் அன்றாட வாழ்வில் ஏற்படும் துன்ப துயரங்களை உளமாற ஏற்றும், உலக வாழ்க்கைக்குத் தன்னைக் கையளிக்காமல், தன்னை இழந்துவிடாமல் நான் எனது என்னும் பற்று அறுத்து வாழ்தல் பெருந்தவம். இந்தக் கூற்றையே கவியரசு கண்ணதாசன் கூறுவார், காவிஉடை புனைவதும் கமண்டலம் ஏந்துவதும், உத்திராட்சைக் கொட்டை அணிவதும் தவமல்ல என சுட்டிக் காட்டுகிறார். இதற்காக நோன்பிருக்கும்போது ஒரு கிலோ இறைச்சிக்குப் பதிலாக மூன்று கிலோ மீன்களை வாங்கிச் சாப்பிடுவது ஒரு மாற்றாக அமையுமே தவிர, அது தவமுயற்சியும் ஆகாது, தவச் செயலும் ஆகாது, அப்படியென்றால் எதுதான் தவம்?

கவிஞர் இராபர்ட் கூறுகிறார். நீ உண்ணும் உணவில் ஒரு பகுதியைப் பசியால் வாடும் ஓர் ஏழைக்கு அளித்து அவனை மகிழ்விப்பதே தவம் என்கிறார். மேலும் நீ மனம் வருந்தும் உள்ளம் கொண்டு வாழ வேண்டுமா? நீ செய்யும் பாவத்திற்குப் பட்டினிபோடு. அதாவது ஒருவன் தன்னையே ஒறுத்தல் முயற்சிகளால் தூ ய்மைப்படுத்திக் கொள்ளுதல் சிறந்த தவம் என்கிறார். இத்தவமும் ஒறுத்தலும் தான் நம்மைப் புனிதத்தில் வழி நடத்துகின்றன. இங்கே இறையன்பும் பிறரன்பும் பேணப்படுகின்றன. நமது ஆன்மாவின் பாவச்சுமைக் குறைகிறது, தன்னலம் வேரறுக்கப்படுகிறது. இறையருள் நம்மை நிரப்புகிறது. நம் தவமுயற்சி எப்படி இருக்க வேண்டும்? "நீ நோன்பிருக்கும்போது வெளிவேடக்காரரைப்போல் முகவாட்டமாய் இருக்க வேண்டாம்" என்றும், "நீ நோன்பிருக்கும்போது தலைக்கு எண்ணெய் தடவி முகத்தைக் கழுவு அப்பொழுது நீ நோன்பிருப்பது மனிதனுக்குத் தெரியாமல் மறைவாயுள்ள உன் தந்தைக்கு மட்டும் தெரியும். அவரும் உனக்குப் பிரதிபலன் அளிப்பார் என்றும் இயேசு கூறுகிறார்.

இங்கே இயேசு குறிப்பிடும் தவம் அல்லது நோன்பு அல்லது தவ முயற்சிகள் அகத்தில் நடைபெறுவன. இறை அகத்தில் நிகழும் அகநிகழ்வுகளாக இருப்பதால் நாம் நமது ஐம்புலன்களையும் ஒருமுகப்படுத்தி, நிகழ்வுக்கு வழி வகுக்க வேண்டும். இந்த அக நிகழ்விற்குத் துணை புரிவன நற்போதனைகள், நற்சிந்தனைகள், அதன் பலன் அறச்செயல் செறிந்த அற்புதமான வாழ்வு. இந்த அற்புதமான வாழ்வைப் பெறத்தான் மனமாற்றம் பெறவேண்டும். இந்த மனமாற்றம் பெற உகந்த காலம்தான் தவக்காலம். இந்தத் தவக்காலத்தில் இறைவனின் மாபெரும் இரக்கத்தை உணர்ந்து வாழ்வில் புதுவாழ்வு, திருந்திய வாழ்வு, இறைவனின் நெருங்கிய அன்புறவு கொண்ட வாழ்வு, பிறரையும் அன்பு செய்து அரவணைத்து வாழ்கின்ற வாழ்வு. இறைவனைப் பிறரில் கண்டுணர்ந்து உதவிடும் வாழ்வு, நம்மையே உணர்ந்து திருந்தி வாழும் தியாக வாழ்வு போன்ற எல்லா நிலைகளிலும் நாம் வாழ நமக்கு வாய்ப்பளித்திருக்கும் காலம் இத்தவக்காலம். ஆன்ம வளம் பெற ஆண்டவனின் அன்பில் வளர வாய்ப்பளிக்கின்ற இத்தவக்காலத்தில் இறைமகன் நம்மைத் தேடி வருகின்றார்.

**நம்மை ஒறுத்து தவம் செய்வதால் நாம் பெறும் நன்மை என்ன?**

முதன் முதலில் உடல் ரீதியாக நலம் பெறுகின்றோம். உடல் நலம் பெறுவதைவிட ஆன்மீக நலன்களை அபரிமிதமாய்ப் பெறுகிறோம். முதலில் இயேசுவோடு ஒன்றித்திருக்கிறோம். அவருடைய பாடுகளில் ஒன்றிக்கிறோம். "திருஅவையாகிய தன் உடலின் பொருட்டு கிறிஸ்து படவேண்டிய வேதனைகளில் இன்னும் குறைவாய் இருப்பதை என் உடலில் நிறைவாக்குகின்றேன்" (கொலோ 1: 24 என புனித சின்னப்பர் எடுத்துரைக்கின்றார். நாம் இயேசுவோடு மட்டுமல்லாது இயேசுவின் உடலாகிய திருஅவையின் வேதனையிலும் பங்கு பெறுகிறோம். பாவப் பரிகாரம் புரிகிறோம். இதனால் அன்றாட வாழ்விற்குத் தேவையான இறையருளை நாம் பெறுகின்றோம்.

இரண்டாவதாக நாம் இயேசுவின் இறப்பில் ஒன்றிக்கிறோம். நான் எனது எனும் தன்னலத்தைத் துறக்கின்றபோது இயேசுவின் சிலுவையில் அதை அறைந்து இறப்பில் ஒன்றாக்கி இனிமையைச் சுவைக்கின்றோம். பவுலடியாரின் வார்த்தையாம் "காலத்தை நன்கு பயன்படுத்துங்கள்" என்பதற்கேற்ப இந்த தவக்காலத்தில் சிறந்த முறையில் கடைப்பிடித்து வாழ்வோம். எல்லா காலங்களிலும் மூவரை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். நாம், பிறர், இறைவன் அதுபோன்றே தவக்காலத்தில் பாரம்பரியமாகத் திருஅவை வலியுறுத்தும் காரியங்களும் மூன்றுதான். தவம், தானம், செபம். எனவே தவக்காலத்தில் எதனை விட்டு விடுவது என்று யோசிக்காமல் எந்த அன்புச் செயலைச் செய்யலாம் என்று சிந்திப்போம், புனிதத்தில் வாழ்வோம், வளர்வோம்.

# கன்னி மரியாவின் கணவர் யோசேப்பு: நம் குடும்ப வாழ்வுக்கு வழிகாட்டி

திரு. ஜான் அலெக்ஸ்

அன்பார்ந்தவர்களே, நமது கத்தோலிக்கத் திருஅவை மார்ச் 19ஆம் நாளன்று கன்னி மரியாவின் கணவரான புனித யோசேப்பு பெருவிழாவைக் கொண்டாடி மகிழ்கின்றது. விவிலியத்தில் ஒரு வார்த்தைக்கூட பேசாமல் மாபெரும் செயல்களைச் செய்தவர் புனித யோசேப்பு. கடவுளின் திட்டத்தில் யோசேப்பு மிகுந்த முக்கியத்துவம் பெற்றவர் என்பது இறையியல் அறிஞர்களின் ஒப்புதல். இத்தகைய நம்பிக்கையின் காரணமாகவே, திருஅவையும் அவருக்குப் பெருவிழா எடுத்து சிறப்பிக்கின்றது.புனித யோசேப்பின் வாழ்க்கை நிகழ்வுகளைக் காட்சியாகக் கண்ட வணக்கத்திற்குரிய மரியா தெ அக்ரெதா என்ற அருட்சகோதரி (1602-1665), புனித யோசேப்பு தாயின் வயிற்றில் ஏழு மாதக் கருவாக இருந்தபோதே தூய ஆவியாரின் அருட்பொழிவைப் பெற்றார் என்று கூறுகிறார். குழந்தைப் பருவத்தில் இருந்தே யோசேப்பு புனிதமானவராக வாழ்ந்து வந்தார் என்றும், சமாதானம் ஏற்படுத்துவதில் ஆர்வம் கொண்டவராக விளங்கினார் என்றும் மரியா தெ அக்ரெதா விவரிக்கிறார். புனித யோசேப்பு சிறு வயது முதலே தாழ்ச்சியும் கீழ்ப்படிதலும் கொண்டவராக இருந்தார். அவரது வாழ்வு செபத்துடன் இணைந்ததாக, கடவுளுக்கு மிகவும் உகந்ததாக இருந்தது. பக்தியிலும் இறையச்சத்திலும் அவர் சிறந்து விளங்கினார்.

பன்னிரண்டாம் வயதில் யோசேப்பு கற்பின் வாக்குறுதியை ஏற்று கடவுளுக்குத் தம்மை அர்ப்பணித்தார். மனிதர்கள் முன்னிலையிலும் அவர் குற்றம் காணமுடியாத தூய வாழ்வு வாழ்ந்து வந்தார். புனித யோசேப்பின் சிறு வயது வாழ்க்கை, நம் குடும்பத்தில் உள்ள சிறுவர்களுக்கு சிறந்த முன்மாதிரியாக இருக்கிறது. சிறுவர்கள் இறைப்பற்றிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க புனித யோசேப்பு வழிகாட்டியாக இருக்கிறார். அவரைப் பின்பற்றி, கடவுளின் திருவுளத்தை அறிந்து செயல்பட செபிக்குமாறு குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் வழிகாட்ட வேண்டும். குழந்தைகள் இறையச்சம் கொண்டு, பக்தியில் வளர அவர்களுக்கு உதவ வேண்டும். புனித யோசேப்பைப் பற்றி நற்செய்தி நூல்கள் மூன்று விவரங்களைத் தருகின்றன: அவர் கடவுளுக்கும் திருஅவைக்கும் மதிப்பளித்து நேர்மையாளராக வாழ்ந்தார், கடவுளின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து கன்னி மரியாவுக்குப் பிரமாணிக்கமுள்ள கணவராக நடந்து கொண்டார், கடவுளின் திட்டத்தை ஏற்று இறைமகன் இயேசுவுக்குப் பொறுப்புள்ள தந்தையாகச் செயல்பட்டார். இவ்வாறு திருக்குடும்பத்தின் மாண்புமிகுத் தலைவராகத் திகழ்ந்தார்.

"திருமணத்திற்குப் புறம்பாக கருத்தாங்கும் எந்தப் பெண்ணும் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும்" என்பது அக்கால யூதர்களின் சட்டமாக இருந்தது. இத்தகையச் சூழலில் தமக்கு மண ஒப்பந்தமான கன்னி மரியா

கருத்தாங்கி நிற்பது யோசேப்புக்குத் தெரிய வருகிறது. யோசேப்பு சட்டத்தை மதித்த நேர்மையாளர். ஆகவே, மரியாவைத் தமது மனைவியாக ஏற்க அவரது மனம் தயங்குகிறது. அதே நேரத்தில், யூத சமூகத்தால் மரியா கல்லெறிப்பட்டு இறப்பதையும் யோசேப்பு விரும்பவில்லை. யோசேப்பு சட்டத்தை விடவும் மனிதநேயத்தை முன்னிறுத்தியவராய், மரியாவை மறைவாக விலக்கிவிடத் திட்டமிடுகிறார். பக்தி மிகுந்தவரான யோசேப்பு, தமக்கேற்பட்டக் குழப்பத்தைக் கடவுளின் பாதத்தில் அர்ப்பணித்து அமைதியான உறக்கத்தில் ஆழ்கிறார். கனவில் தோன்றிய வானதூதர் வழியாக அவருக்குத் தெளிவு கிடைக்கிறது. "கன்னி மரியா கருவுற்றிருப்பதற்குத் தூய ஆவியே காரணம்" என்பதை அறிந்ததும், அவரைத் தமது மனைவியாக யோசேப்பு ஏற்றுக் கொள்கிறார்.

இறைமகனைக் கருத்தாங்கியிருந்த மரியா தங்குவதற்குப் பெத்லகேமில் விடுதி எதுவும் கிடைக்காத நிலையில், ஒரு மாட்டுத் தொழுவத்தை வசதியான தங்குமிடமாக மாற்றிக் கொடுத்தவர் யோசேப்பு. கன்னிமரியாவுக்கு முன்பாகவே, தந்தை என்ற முறையில் குழந்தை இயேசுவைக் கரங்களில் ஏந்தும் பேற்றினை புனித யோசேப்பு பெற்றார். கடவுளின் திட்டத்தை நிறைவேற்றியதற்குக் கிடைத்தப் பரிசு அது. மனிதராகத் தோன்றிய இறைமகனுக்கு "இயேசு" என்று பெயரிட்ட வேளையில், திருச்சட்டத்தின்படி அவரது தந்தையானார் யோசேப்பு. குழந்தை இயேசுவைக் கரங்களில் ஏந்திக்கொண்டு எருசலேம் கோவிலில் தூய்மைச்சடங்கை நிறைவேற்றிய வேளையில், கன்னி மரியாவுக்குப் பொருத்தமானத் துணைவராக யோசேப்பு தெரிகிறார். குழந்தை இயேசுவைக் கொல்ல ஏரோது தேடிய வேளையில், மரியாவையும் இயேசுவையும் அழைத்துக்கொண்டு எகிப்தில் அடைக்கலம் புகுந்த யோசேப்பில் பொறுப்புள்ள கணவரைக் காண்கிறோம். ஒரு குடும்பத் தலைவர் எப்படி தமது மனைவியையும் குழந்தைகளையும் பாதுகாக்க வேண்டும் என்ற பொறுப்புணர்வை புனித யோசேப்பிடமிருந்து நாம் கற்க வேண்டும். தமது வாரிசை மரியா வயிற்றில் சுமக்கவில்லை என்றாலும், கன்னிமரியா மீது புனித யோசேப்பு காட்டிய அன்பும் அக்கறையும் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. மரியாவும் யோசேப்பின் சொல் கேட்டு அவருக்கு உகந்த குடும்பத் தலைவியாக இருந்தார் என்பது உண்மை. ஆனால் மரியாவின் மகனான இயேசுவைக் காப்பாற்ற யோசேப்பு மேற்கொண்ட முயற்சிகள், அவரது பெருந்தன்மையையும் இறைத்திட்டத்திற்குக் கீழ்ப்படியும் மனதையும் காட்டுகின்றன.

இறைமகன் இயேசுவின் இவ்வுலகத் தந்தை என்ற முறையில், இயேசு ஞானத்திலும் அறிவிலும் வளர யோசேப்பு துணையாக இருந்தார். பன்னிரு வயதில் எருசலேம் கோவிலில் தங்கிவிட்ட இயேசு, மறைநூல் அறிஞர்களையும் வியக்கச் செய்யும் அளவுக்குப் பேசியதில் யோசேப்பின் பங்கும் இருந்தது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இயேசுவைக் காணாமல் பதறித் துடித்த கன்னி மரியாவுக்கு உறுதுணையாக, அவரைத் தேடியலைந்த புனித யோசேப்பில் பொறுப்புள்ள தந்தையைக் காண்கிறோம். "நம் ஆண்டவரைத்

தூக்கிச் சுமக்கும் அருளையும் பெரும் பேற்றையும் யோசேப்பு பெற்றிருந்தார். அடிக்கடி அவரது ஆசிபெற்ற கரங்களில் இருப்பதிலேயே நம் ஆண்டவர் மிகுந்த இன்பம் கொண்டார். மனிதராகத் தோன்றியத் தம் ஒரே மகன் இயேசு கிறிஸ்துவுக்கு கல்வி கற்பிக்க, கடவுள் தேர்ந்தெடுத்த யோசேப்பு எவ்வளவு பாராட்டுக்குரியவர்" என்று புனித பிரான்சிஸ் தெ சேல்ஸ் வியந்து போற்றுகிறார்.

"இயேசு அவர்களுடன் சென்று நாசரேத்தை அடைந்து, அவர்களுக்குப் பணிந்து நடந்தார். அவர் ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்" (லூக் 2:51,52) என்று நற்செய்தியாளர் கூறுவதில் ஆழ்ந்த பொருள் உள்ளது. "இவர் தச்சருடைய மகன் அல்லவா?" (மத் 13:55), "இவர் தச்சர் அல்லவா" (மாற் 6:3) என்னும் கூற்றுகள், இயேசுவின் வாழ்விலும் நாசரேத்திலும் யோசேப்பு ஏற்படுத்திய தாக்கத்தைப் பறைசாற்றுகின்றன. இவ்வாறு ஒரு பொறுப்புள்ள தந்தையாக புனித யோசேப்பு செயல்பட்டதைக் காண்கிறோம். கடவுளின் திருவுளத்தை அறிந்து நடக்கும் குழந்தை உள்ளம் கொண்டவராகவும், பொறுப்புள்ள குடும்பத் தலைவராகவும், அன்பு நிறைந்த தந்தையாகவும் செயல்படுவது எப்படி என்பதற்கு புனித யோசேப்பு சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கிறார். குடும்பங்களின் பாதுகாவலரான அவர், நமது குடும்பங்கள் கடவுளுக்கேற்றப் பாதையில் வாழ புனித யோசேப்பின் முன்மாதிரியைப் பின்பற்றி, நமது குடும்பங்களையும் திருக்குடும்பங்களாக மாற்ற உறுதியேற்போம்.

## புனித பெர்பெத்துவா, பெலிசிட்டி வாழ்வு தரும் பாடம்

திரு. விக்டர்

புனித பெர்பெத்துவா மற்றும் பெலிசிட்டி கருவுற்றிருக்கும் பெண்களின் பாதுகாவலர்கள். "நம்பிக்கையில் ஊன்றி நில்லுங்கள், ஒருவரையொருவர் அன்பு செய்யுங்கள்" என்று இறப்பதற்கு முன்பாகத் தமது கடைசி வார்த்தையை அனைவரிடமும் கூறியவர் பெர்பெத்துவா. 203ம் ஆண்டு கிறிஸ்தவர்களைக் கொன்றழித்த காலத்தில் பெர்பெத்துவா கிறிஸ்தவராக மனமாற முடிவு செய்தார். ஏற்கெனவே டினோக்ரேடஸ் என்னும் இவரின் சகோதரனும் இந்த மறை காலத்தில் இறந்த பிறகு மற்ற சகோதரனும் பெர்பெத்துவாவைப் பின்பற்றினான். இவருடைய தந்தை எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தார். ஏனென்றால் 22 வயதான பெர்பெத்துவாவிற்கு அப்போதுதான் குழந்தைப் பிறந்திருந்தது. அருகிலிருந்த பானையைத் தன் தந்தையிடம் சுட்டிக்காட்டிய பெர்பெத்துவா இதைப் பானை என்பதை தவிர வேறு எப்படியேனும் அழைக்க முடியுமா என்று கேட்டார், முடியாது என்று தந்தை சொன்னதும் "நானும் கிறிஸ்தவர் என்பதைத் தவிர வேறு எதனாலும் அழைக்கப்பட விரும்பவில்லை" என்றார். தந்தையிடமிருந்து தப்பிச் சென்ற பெர்பெத்துவா திருமுழுக்கு பெறுபவர்களுக்கான புகுமுக இல்லத்தில் தம்மையே தயார் செய்தார்.

திருமுழுக்குப் பெறுவதற்குத் தம்மையே தயார் செய்து கொண்டிருந்த பெர்பெத்துவா ரெவாகேட்டஸ், சதுர்னியஸ், செதுந்தலுஸ் மற்றும் பெலிசித்தா ஆகியோரை ஆட்சியாளர்கள் கைது செய்தார்கள். ஐந்து பேருக்கும் மறைக்கல்வி போதித்த சத்துருஸ் இவர்களுக்கு முன்னதாகவே சிறையில் அடைக்கப்பட்டார். சிறை முழுவதும் புது கிறிஸ்தவர்கள் அடைக்கப்பட்டு இருந்தார்கள். சிறையில் கூட நெருக்கடி மற்றும் இருட்டாக இருந்தது. இதுவரை இப்படியொரு இருட்டை தன் வாழ்வில் பெர்பெத்துவா கண்டதில்லை. சிறைக்கு வந்த இரண்டு திருத்தொண்டர்கள் காவலர்களுக்குப் பணம் கொடுத்து கைதிகள் அனைவரும் கொஞ்சம் இடவசதியோடு இருக்க ஏற்பாடு செய்தார்கள். பால் கொடுப்பதற்காகக் குழந்தையைச் சிறைக்குக் கொண்டு வருவதற்கும் அனுமதி பெற்றுத் தந்தார்கள்.

பிறகு குழந்தையைத் தன்னுடனே வைத்துக் கொள்ள அனுமதி பெற்ற பெர்பெத்துவா "குழந்தையைப் பார்த்ததும் எனது சிறை எனக்கு அரண்மனை போலானது" என்று குறிப்பிட்டார். சிறைக்கு வந்த தந்தையின் காலைக் கட்டிக்கொண்டு அதே தந்தையிடம் "எனது சக்தியினால் அல்ல, இறைவனின் அருளாலே நான் இருக்கிறேன்" என்றார். விசாரணையின்போது தந்தையின் வேண்டுகோளினால் நீதிபதி பரிந்துபேசி மனதை மாற்றி கிறிஸ்தவ மறையைப் புறக்கணிக்குமாறு கேட்டார். மறுப்பே பதிலாக வந்ததால் பெர்பெத்துவாவை விலங்குகளுக்கு உணவாக்க நீதிபதி தீர்ப்பளித்தார். தந்தை குழந்தையை வலுக்கட்டாயமாகப் பரித்துச் சென்றார். "பால் கொடுக்காததால் மார்பில் பால்கட்டி எந்த துன்பமும் வராமல் இறைவன் என்னை காத்தார்" என்றார் பெர்பெத்துவா. சிறையில் செபித்தபோது ஆண்டவருடன் பேசினார், ஏற்கெனவே இறந்த தனது தம்பியைப் பார்க்க ஆசை தெரிவித்து தம்பியைப் பார்த்தார். அவன் மோட்சத்தில் இல்லாததைக் கண்டு அவனுக்காகச் செபித்தார். அடுத்தடுத்த காட்சியின்போது அவர் மோட்சத்தில் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தார்.

**பெலிசித்தா:** பெலிசித்தா எட்டு மாத கர்ப்பிணியாக இருந்தார். வயிற்றிலிருக்கும் குழந்தையுடன் கொல்லக் கூடாது என்று சட்டம் இருந்தது. சட்டங்களைக் கடைப்பிடிக்காத அதிகாரிகளையும் தம் குழந்தையையும் நினைத்து பெலிசித்தா கலங்கினார். பிள்ளையை பெற்றெடுக்காமல் இறந்து விடுவோமோ என்று கவலைப்பட்டார் நாட்கள் ஆயின. பிரசவ வலியால் துடித்தார் "இதற்கே இப்படி அழுகிறாயே, விலங்குகள் உன்னைக் கடித்துக் குதறும் அப்போது என்ன செய்வாய்?" என்று அங்கு நின்றுக்கொண்டிருந்த காவலர் கேட்டதற்கு "இப்போது நான் தனியாகத் துன்பப்படுகிறேன் ஆனால் அங்கே என்னோடு இன்னொருவரும் துன்பப்படுவார். ஏனென்றால் நான் அவருக்காகவே துன்பப்படுகிறேன்" என்றார், பெலிசித்தாவுக்குப் பெண் குழந்தைப் பிறந்தது. அதனை கார்த்தேஜில் உள்ள ஒரு கிறிஸ்தவ பெண் எடுத்துச் சென்று வளர்த்தார். எல்லோரும் அரங்கத்திற்குள் இழுத்துச் செல்லப்பட்டார்கள். அரங்கம் முழுவதும் மக்கள் வெள்ளம். கிறிஸ்தவர்களின்

இரத்த வாடைக்காக ஆரவாரத்துடன் காத்துக் கிடந்தார்கள். பட்டினிப்போட்டு வளர்க்கப்படும் விலங்குகள் திறக்கப்பட்டன. ஓடிவந்த விலங்குகள் கிறிஸ்தவர்களின் உடல்களைக் கிழித்துத் தின்றன. அவைகளின் பசி அடங்கியது, கிறிஸ்தவர்களின் நம்பிக்கை அடங்கவில்லை, எழுந்து ஒலி வீசியது. ஆரம்பக் காலங்களில் பெர்பெத்துவா மற்றும் பெலிசித்தியின் மறைசாட்சியம் வழிபாடுகளில் முக்கிய இடம் பெற்றது.

## திருஅவைச் செய்திகள்

திரு. சாண்டோ

### ஞானியர் மூவரின் முன்மாதிரியைப் பின்பற்றுவோம்!

இந்த உரையில், ஞானியர் மூவரின் முன்மாதிரியைப் பின்பற்றும்படி விசுவாசிகளை ஊக்குவித்துள்ளார். மேலும் உண்மையான நம்பிக்கையுடன் கடவுளைத் தேடுவது, அவருக்கு நம் இதயங்களையும் பரிசுகளையும் வழங்குவது, சுதந்திரத்தையும் மனித மாண்பையும் தரும் அவருடைய அரசாட்சியை அங்கீகரிப்பது ஆகியவற்றைக் குறித்தும் விளக்கியுள்ளார் திருத்தந்தை. குழந்தை இயேசுவின்மீது மூன்று ஞானியர் கொண்டிருந்த நம்பிக்கையையும் எதிர்நோக்கையும் நாமும் பின்பற்றுவோம் என்று கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தீவிர நுரையீரல் அழற்சி நோய் காரணமாக, உரோமையிலுள்ள ஜெமெல்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் வேளை, பிப்ரவரி 19, இப்புதனன்று, தனது வழக்கமான புதன் பொது மறைக்கல்வி உரைக்காகத் தயாரித்து வழங்கியுள்ள எழுத்துவடிவப் படிவத்தில் இவ்வாறு கூறியுள்ளார்.யூபிலி ஆண்டில், "எதிர்நோக்கின் திருப்பயணிகள்" என்ற தலைப்பில் தொடர்ந்து புதன் மறைக்கல்வி உரைகளை வழங்கிவரும் திருத்தந்தை, இவ்வாரம் மத்தேயு நற்செய்தியிலிருந்து (மத். 2: 9-11) மூன்று ஞானியர் குழந்தை இயேசுவைச் சந்திக்கும் நிகழ்வு குறித்து தனது சிந்தனைகளைப் பகிர்ந்துள்ளார். ஞானியர் வெளியாள்களாகக் (outsiders) கருதப்படுவது, அவர்கள் வெவ்வேறு நாடுகளையும் வாழ்வின் நிலைகளையும் சேர்ந்தவர்கள் என்பதை எடுத்துக்காட்டுகிறது என்று கூறியுள்ள திருத்தந்தை, ஞானியர் ஒரு விதிவிலக்கான உருவத்தின் பிறப்பைக் குறிக்கும் விண்மீன் ஒன்றினால் ஈர்க்கப்படுகின்றனர் என்றும், மேலும் அவர்கள் புதிதாகப் பிறந்த அரசரைத் தேடு வருகிறார்கள் என்றும் உரைத்துள்ளார்.

ஞானியரின் பயணம் நம்பிக்கை, துணிவு மற்றும் எதிர்நோக்கை அடையாளப்படுத்துகிறது என்றும், அவர்கள் தெய்வீக வழிகாட்டுதலைப் பின்பற்றி, குழந்தை இயேசுவிடம் அழைத்துச் செல்லப்படுகிறார்கள் என்றும் கூறியுள்ள திருத்தந்தை, ஞானியர் இயேசுவுக்கு மதிப்புமிக்க பரிசுகளை வழங்குகின்றனர் என்றும், அவர்கள் அவரை ஏழ்மையின் கோலத்தில் கண்டபோதிலும், அவரை கடவுளாக ஏற்று வணங்குகின்றனர்

என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். ஞானியர் மூவரும் யூதரல்லாத நாடுகளிலிருந்து வந்த முதல் விசுவாசிகளையும், அனைத்து மொழிகளிலும் நாடுகளிலும் ஒன்றித்திருக்கும் திருஅவையின் உருவத்தையும் அடையாளப்படுத்துகிறார்கள் என்றும் எடுத்துக்காட்டியுள்ளார் திருத்தந்தை.

## 2. யூபிலி ஆண்டு புதன் மறைக்கல்வி உரைகள் ஒரு கண்ணோட்டம்

கடந்த 7 வாரங்களாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கிய நமது எதிர்நோக்காம் இயேசு கிறிஸ்து என்னும் யூபிலி ஆண்டிற்கான புதிய தொடர் மறைக்கல்வி உரை பற்றிய ஒரு கண்ணோட்டத்தினை இன்றைய நம் நிகழ்வில் காணலாம். டிசம்பர் 24 செவ்வாய்க்கிழமை கிறிஸ்து பிறப்பு பெருவிழா நள்ளிரவு திருப்பலிக்கு முன்பாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவிலில் உள்ள புனித கதவினைத் திறந்து வைத்து, யூபிலி ஆண்டு 2025 தொடங்கி வைத்தார். எதிர்நோக்கின் திருப்பயணிகள் என்ற இந்த யூபிலி ஆண்டு 2025 முன்னிட்டு டிசம்பர் 18 புதன்கிழமையன்று புதிய தொடர் மறைக்கல்வி உரையினை ஆரம்பித்தார் திருத்தந்தை. இயேசுவின் குழந்தைப்பருவம், இறைத்தந்தையால் அதிகமாக அன்பு செய்யப்படும் குழந்தைகள், அன்னை மரியாவிற்கு கிறிஸ்து பிறப்பின் முன்னறிவிப்பு, யோசேப்பிற்குக் கிறிஸ்து பிறப்பின் முன்னறிவிப்பு, அன்னை மரியா எலிசபெத் சந்திப்பு மற்றும் அன்னை மரியின் பாடல், இயேசுவின் பிறப்பும் இடையர்களின் வருகையும் என்ற தலைப்புக்களில் தனது கருத்துக்களை எடுத்துரைத்தார். இறுதி இருவாரங்களான பிப்ரவரி 5 மற்றும் 12 ஆகிய இரு புதன்கிழமைகளில் திருத்தந்தைக்குப் பதிலாக பேரருள்திரு பியர்லூயிஜி ஜிரெல்லி அவர்கள் திருத்தந்தையின் சார்பாக அவரது மறைக்க்கல்வி உரைக் கருத்துக்களைத் திருப்பயணிகளுக்கு எடுத்துரைத்தார்.

## 3. கிறிஸ்துவின் நற்செய்தியை உலகில் பரப்பும் இறையியல் கல்வி நிறுவனம்

Triveneto இறையியல் கல்வித்துறைக் குடும்பம் முழுவதும் திருஅவையின் பணிக்கு ஒத்துழைப்பதில் விடாமுயற்சியுடன் இருக்க வேண்டும் என்றும், கிறிஸ்துவின் நற்செய்தியை உலகில் பரப்ப வேண்டும் என்றும் ஊக்கமூட்டி வாழ்த்துச்செய்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். கடந்த 20 ஆண்டுகளாக இறையியல் கல்வி வாயிலாக மக்களுக்குச் செய்து வரும் ஏராளமான நன்மைகள், ளைய தலைமுறையினருக்கு ஆதரவாகச் செயல்படுதல் போன்றவற்றிற்காகத் தனது நன்றிகளைத் தெரிவித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நற்செய்தியின் உண்மையை, சமகால மனிதனுக்குத் திறம்பட கொண்டு செல்வதற்கான புதிய சவால்களைத் துணிவுடன் ஏற்று, செயல்பட்டு வருவதற்குத் தனது வாழ்த்துக்களையும் அச்செய்தியில்

குறிப்பிட்டுள்ளார். இறையியல் கல்வி மற்றும் ஆழப்படுத்துதல் வழியாக மட்டுமன்றி, ஒவ்வொரு நபரின் சான்றுள்ள கிறிஸ்தவ வாழ்வின் வழியாக உருவாக்கத்திற்கான இடமாக இறையியல் கல்வி நிறுவனங்கள் இருக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடவுளில் அடித்தளம் கொண்ட உண்மை, நன்மை, அழகு ஆகியவற்றின் அடிப்படையில், இளைஞர்கள் தங்களை உணர்ந்து கொள்ள, அவர்களுக்கு எவ்வாறு உதவுவது என்பதை ஆசிரியர்கள் நன்கறிவார்கள் என்றும் எடுத்துரைத்துள்ளார்.

## 4. மறைந்திருக்கும் கடவுளின் மகத்துவத்தை எடுத்துரைக்கும் பணி

உலகில் மறைந்திருக்கும், கடவுளின் மகத்துவத்தை, நமது கண்கள் மற்றும் இதயத்தால் உணரவைப்பது கலைஞர்களின் பணி என்றும், மனிதகுலம் தனது திசையையும், எதிர்நோக்கின் எல்லையையும் இழக்காமல் இருக்க உதவுவதும் கலைஞர்களின் பணி என்றும் எடுத்துரைத்தார் கர்தினால் José Tolentino de Mendonça பிப்ரவரி 16, ஞாயிற்றுக்கிழமை வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவிலில், கலைஞர்கள் மற்றும் கலாச்சார உலகின் விழாவை முன்னிட்டு நடைபெற்ற சிறப்புத் திருப்பலிக்கு தலைமையேற்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மறையுரைக் கருத்துக்களை எடுத்துரைத்தபோது இவ்வாறு கூறினார் கலாச்சாரம் மற்றும் கல்விக்கான திருப்பீடத்துறையின் தலைவர் கர்தினால் José Tolentino de Mendonça. கலைஞர்கள் மற்றும் கலாச்சார உலகின் மக்கள் அனைவரும் பேறுபெற்றொர்களின் சான்றுகளாக இருக்க அழைக்கப்படுகின்றார்கள் என்றும், அழகை உருவாக்குவது மட்டுமல்லாது, வரலாற்றின் இடையில் மறைந்திருக்கும் உண்மை, நன்மை மற்றும் அழகை வெளிப்படுத்துதல், குரலற்றவர்களுக்கு குரல் கொடுத்தல், துன்பத்தை நம்பிக்கையாக மாற்றுதல் போன்றவை கலைஞர்களின் நோக்கமாக இருக்கவேண்டும் என்றும் எடுத்துரைத்தார் கர்தினால் José Tolentino de Mendonça.

## 5. திருத்தந்தையின் பொதுச் சந்திப்புக்கள் ஞாயிறு வரை இரத்து

பிப்ரவரி 18, செவ்வாய்க்கிழமை திருப்பீடச் செய்தித் தொடர்பகம் வெளியிட்ட தகவல்களின்படி, பிப்ரவரி 23, ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ள, திருத்தொண்டர்களுக்கான யூபிலி சிறப்புத் திருப்பலிக்கு, புதிய வழிகளில் நற்செய்தி அறிவித்தலை ஊக்குவிக்கும் திருப்பீடத்துறையின் தலைவர், பேராயர் ரீனோ பிசிகெல்லா அவர்கள் தலைமையேற்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர் மருத்துவ சிகிச்சைக் காரணமாக திருத்தந்தையின் பொதுச்சந்திப்புக்கள் அனைத்தும் இரத்து செய்யப்பட்டுள்ளன. கடந்த பிப்ரவரி 14 வெள்ளிக்கிழமை பிற்பகல் முதல் உரோம் ஜெமெல்லி மருத்துவமனையில் மூச்சுக்குழல் அழற்சி நோய் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

பிப்ரவரி 23, ஞாயிற்றுக்கிழமை வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவிலில் உரோம் உள்ளூர் நேரம் காலை 9 மணியளவில் நடைபெற உள்ள திருப்பலிக்குத் திருத்தந்தைக்குப் பதிலாக பேராயர் ரீனோ பிசிகெல்லா அவர்கள் தலைமையேற்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சுடர் வாசகர் போட்டி - 119

1. மூன்று அனுபவங்களைக் கொண்டது
2. 15 முறை
3. புனித பீட்டர் தமியான்
4. புனித மெதோடியுஸ்
5. திருத்தந்தை 9ம் பத்திநாதர்
6. புனித ஜோசபின் பக்கித்தா
7. ஓரியூரில் தலை வெட்டப்பட்டு
8. சிமியோன் அன்னை மரியாவிடம் கூறியது
9. ஸ்பெயின் உள்நாட்டு போரை முன் கூட்டியே தீர்க்கதரிசனமாய் கூறினார்
10. புனித லூயிஜி வெர்சிலியா
11. புனித பொன்பீலியூஸ், அலெக்சிஸ், அமதியூஸ், ஹக், சொஸ்தேனூஸ், மனேதுஸ், போன் குந்தா.
12. புனித மெதோடியுஸ்
13. புனித ஸ்கொலாஸ்திக்கா
14. நன்றிப் பாடல்
15. தமிழ்நாட்டிலுள்ள மதுரையில்

### குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

A. Anthony Stephen, Bangalore

Mrs. Jennifer, Chennai

Mr. Francis Paulraj, Dharmapurai

## சுடர் வாசகர் போட்டி 120

1. புனித கசிமீர் எப்பொழுது, எங்கு பிறந்தார்?
2. வேத கலாபனை நடந்த காலத்தில் கிறிஸ்தவ நெறியைத் தழுவி திருமுழுக்குப் பெற்றது யார்?
3. நமது ஆன்ம வாழ்வின் குறிக்கோள் எது?
4. "ஆண்டவரின் திருப்பெயரை அறிக்கையிட்டு மன்றாடுகிறவர் என்ன பெறுவர்?
5. தாவீதின் வழித்தோன்றலாக வந்தவர் யார்?
6. நம்முடைய பாவங்கள் எதற்குத் தடையாய் உள்ளன?
7. (தொ.நூ. 3:15, கலா.4:4)ல் நமக்கு தரும் செய்தி என்ன?
8. ஞானியரின் பயணம் எதனை அடையாளப்படுத்துகிறது?
9. நற்செய்தி அறிவித்தலை ஊக்குவிக்கும் திருப்பீடத்துறை தலைவரின் பெயரென்ன?
10. புனித ரூபர்ட் எப்பொழுது மரித்தார்?
11. 792ல் எந்த இரு பிரிவினருக்கு வேதபோதக கலவரம் மூண்டது?
12. தூதரின் வாழ்த்துரை மீட்பு வரலாற்றில் எவ்வாறு அமைகிறது?
13. இயேசுவின் இறையாட்சி என்னவாக நிலைப்பெற்றது?
14. திருவிவிலியத்தை அறியாதோர் எதற்கு ஒப்பாவர்?
15. தவக்காலத்தில் நாற்பது நாள்களில் நாம் என்ன செய்ய வேண்டுமென திருஅவை அழைக்கிறது?


### தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 200/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

தீபகம்
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
கைப்பேசி எண்: 9385201453

பெயர்: ................................
முகவரி: ................................
................................
................................
................................

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

பவோலா நகர் புனித பிரான்சிஸ்
புனித இசிதோர்
புனித வின்செண்ட் பெரர்
தவக்காலம் 5ம் ஞாயிறு
புனித ஜான் பாப்டிஸ்ட்
புனித ஸ்தனிஸ்லாஸ்
ஆண்டவருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு
ஆண்டவரின் இரவு விருந்து பெரிய வியாழன்
பாடுகளின் வெள்ளி
பாஸ்கா திருவிழிப்பு
ஆண்டவரின் உயிர்ப்பு ஞாயிறு மற்றும் இறையழைத்தல் ஞாயிறு
இறை இரக்கத்தின் ஞாயிறு
சியான்னா நகர் புனித கத்ரீன்
புனித ஐந்தாம் பயஸ்

### பகுதி 2: நம்பிக்கையில் வளர...

வாழ்வை மாற்றும் புனித வாரம்
உயிர்ப்பின் மக்களாய் வாழ்வோம்
புனித மாற்கு - வாழ்வு தரும் பாடம்
திருஅவையின் செய்திகள்

**அன்பு நிறை வாசகர்களே!**

இம்மாத "சுடர் வாசகர் போட்டி"பதில்களை மார்ச் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

## மார்ச் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | ச | புனித ஹென்றி மோர்ஸ் | சீராக். 17: 1-15 | மாற்கு 10: 13-16 |
| 2 | **ஞா** | **பொதுக்காலம் 8ம் ஞாயிறு** | **I.** சீராக். 27: 4-7<br>**II.** 1கொரி. 15: 54-58 | லூக். 6: 39-45 |
| 3 | தி | | சீராக். 17: 20-29 | மாற்கு 10: 17-27 |
| 4 | செ | புனித கசிமீர் | சீராக். 35: 1-12 | மாற்கு 10: 28-31 |
| 5 | **பு** | **திருநீற்றுப் புதன் தவக்காலம்** | **I.** யோவே. 2: 12-18<br>**II.** 2கொரி. 5: 20-6:2 | மத். 6: 1-6, 16-18 |
| 6 | வி | | இச. 30: 15-20 | லூக். 9: 22-25 |
| 7 | வெ | புனிதையர் பெர்பெத்துவா, பெலிசிட்டி | எசா. 58: 1-9 | மத். 9: 14-15 |
| 8 | ச | இறைவனின் புனித ஜான் | எசா. 58: 9-14 | லூக். 5: 27-32 |
| 9 | **ஞா** | **தவக்காலம் முதல் ஞாயிறு** | **I.** இச. 26: 4-10<br>**II.** உரோ. 10: 8-13 | லூக். : 4-1-13 |
| 10 | தி | | லேவி. 19: 1-2, 11-18 | மத். 25: 31-46 |
| 11 | செ | | எசா. 55: 10-11 | மத். 6: 7-15 |
| 12 | பு | | யோனா. 3: 1-10 | லூக். 11: 29-32 |
| 13 | வி | | எஸ். (கி) 4: 17 | மத். 7: 7-12 |
| 14 | வெ | | எசே. 18: 21-28 | மத். 5: 20-26 |
| 15 | ச | | இச. 26: 16-19 | மத். 5: 43-48 |
| 16 | **ஞா** | **தவக்காலம் இரண்டாம் ஞாயிறு** | **I.** தொ.நூ. 15: 5-12,17-18.21<br>**II.** பிலி. 3: 17-4:1 | லூக். 9: 28-36 |
| 17 | தி | புனித பேட்ரிக் | தானி. 9: 4-11 | லூக். 6: 36-38 |
| 18 | செ | எருசலேம் நகர்ப் புனித சிரில் | எசா. 1:10, 16-20 | மத். 23: 1-12 |
| 19 | **பு** | **புனித யோசேப்பு: புனித கன்னி மரியாவின் கணவர் பெருவிழா** | **I.** 2சாமு. 7: 4-5.12-14.16<br>**II.** உரோ. 4: 13,16-18.22 | லூக். 2: 41-51 |
| 20 | வி | | எரே. 17: 5-10 | லூக். 16: 19-31 |
| 21 | வெ | | தொ.நூ. 37: 3-4.12-13.17-28 | மத். 21: 33-43, 45-46 |
| 22 | ச | | மீக். 7: 14-15, 18-20 | லூக். 15: 1-3, 11-32 |
| 23 | **ஞா** | **தவக்காலம் மூன்றாம் ஞாயிறு** | **I.** விப. 3: 1-8, 13-15<br>**II.** 1கொரி. 10: 1-6, 10-12 | லூக். 13: 1-9 |
| 24 | தி | | 2அர. 5: 1-15 | லூக். 4: 24-30 |
| 25 | **செ** | **ஆண்டவரின் பிறப்பின் அறிவிப்பு பெருவிழா** | **I.** எசா. 7: 10-14, 8:10<br>**II.** எபி. 10: 4-10 | லூக். 1: 26-38 |
| 26 | பு | | இச. 4: 1, 5-9 | மத். 5: 17-19 |
| 27 | வி | | எரே. 7: 23-28 | லூக். 11: 14-23 |
| 28 | வெ | | ஓசே. 14: 1-9 | மாற்கு 12: 28-34 |
| 29 | ச | | ஓசே. 6: 1-6 | லூக். 18: 9-14 |
| 30 | **ஞா** | **தவக்காலம் நான்காம் ஞாயிறு அக்களிப்பின் ஞாயிறு** | **I.** யோசுவா. 5: 9, 10-12<br>**II.** 2கொரி. 5: 17-21 | லூக். 15: 1-3. 11-32 |
| 31 | தி | | எசா. 65: 17-21 | யோவா. 4: 43-54 |

TO SHARE THE LIGHT

# தீபகம் – தொன் போஸ்கோ

## நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்

வழங்கும்



# இல்லங்களில் திருவிவிலியக் கல்வி

திருவிவிலியத்தை அதிகமாய் படித்து செபிக்கின்ற இந்த காலத்தில் அதனை நுணுக்கமாய் கற்றுத் தெளிவுறுதலும் தேவையான ஒன்றே.

திருவிவிலியத்தின் கருத்துக்கள் பற்றி நம்முடைய இல்லத்தில், அன்பியத்தில், சமூகத்தில் தெளிவுற உரையாடுவதற்கும், திருவிவிலியத்தை அச்சமின்றி, தயக்கமின்றி கற்றறிதல் சாலச் சிறந்தது. "திருவிவிலியத்தை அறியாதோர் இயேசுவை அறியாதவர்கள்" என்பது முதுபெரும் பேரறிஞரின் முடிவு. நாம் விவிலியப் புத்தகங்கள் அனைத்தையும், ஆழ்ந்து தெரிந்துக் கொள்வதும், தெரிந்துக் கொண்டதன் அடிப்படையில் இயேசுவின் உள்ளக்கிடக்கையை நாம் அறிந்துக் கொள்வதும், அதன்வழி நம் பணி வாழ்வை அமைத்துக் கொள்வதும், காலத்தின் கட்டாயம். "இல்லந்தோறும் திருவிவிலியக் கல்வி" புத்தகங்கள் நமக்கு மிகவும் உதவும்.

தயார் நிலையில் இருப்பவை மத்தேயு, யோவான், திருத்தூதர் பணிகள், திருவெளிப்பாடு விளக்கக் குறிப்புகள். பத்து ஆண்டுகளில் திருவிவிலியத்தை முழுமையாய் நாம் கற்றுத் தெளிவுற முன்வருவோம்.

அன்பு இறைச்சமூகமே, தீபகம் முன்னெடுத்திருக்கும் திருவிவிலிய கல்வி பாசறையில் கலந்துக் கொண்டு பயன்பெறுவோம் வாருங்கள். திருத்தூதர் பணிகள் நூலின் 15 பாடங்களைப் பயின்று சான்றிதழ் பெற அன்புடன் அழைக்கின்றோம். கல்விக் கட்டணம் ரூ. 500/- மட்டும்.

**BANK DETAILS :**

| | |
|---|---|
| Customer Name | : SISS A/C DEEPAGAM |
| Bank Name | : South Indian Salesian Society |
| Account No | : 013805300007612 |
| Branch Name | : Kellys, Purasawalkam |
| IFSC | : SIBL0000138 |

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள
**தீபகம்**
+91 9385201453

**தீபகம் - தொன் போஸ்கோ**
**நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்**

வழங்கும்

# இயேசுவும் நானும்

**ஒலி - ஒளி நாடகம் 2025**

**இதுவரை பதிவு செய்த ஆலயங்கள்**

- புனித சவேரியார் ஆலயம், பிராட்வே
- புனித பாத்திமா அன்னை ஆலயம், கோடம்பாக்கம்
- தூய இருதய ஆண்டவர் ஆலயம், புதுச்சேரி
- ஆறுதல் அன்னை ஆலயம், வியாசர்பாடி
- லூர்து அன்னை ஆலயம், ஏலகிரி
- சகாய அன்னை ஆலயம், திருப்பத்தூர்
- லூர்து அன்னை திருத்தலம், பெரம்பூர்
- சகாய அன்னை ஆலயம், ஜவ்வாது மலை
- தூய இருதய ஆண்டவர் ஆலயம்,போளூர்
- காணிக்கை அன்னை ஆலயம், இராயப்பேட்டை
- மரியன்னை இணைப்பேராலயம், பாரிமுனை
- சகாய அன்னை ஆலயம், பேசின் பாலம்

5 மேடைகள்
30 கலைஞர்கள்
60 நிமிடங்களில்

**தவக்காலச் சிறப்பு ஒலி–ஒளி நிகழ்ச்சி**

**ஆண்டவரின் பாடுகளின் வாயிலான ஓர் ஆன்மீகத் தேடல்!**

உங்கள் பங்குகளில் அரங்கேறத் தொடர்பு கொள்க :

திரு. **சாண்டோ** அலைபேசி : 9840263623

*தயாரிப்பு* : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)
*கணினியேற்றம்* : **கபிரியேல் மேரி** *அட்டைப்பட வடிவமைப்பு* : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT
*தயாரிப்பில் மேற்பார்வை* : **சாண்டோ, ஈசாக்** *அச்சிட்டோர்* : **சிகா அச்சகம்,** *கீழ்ப்பாக்கம், சென்னை - 10*